# சங்கமயுகம்

மலர்: 26 ஏப்ரல் - மே 2012 இதழ்: 1

இருமாத இதழ்: ரூ. 7.00



## கடவுள் ஒருவரே !
## உலகமே ஒரு குடும்பம்!

SMS மேல்நிலைப்பள்ளி மைதானம்,
திருச்சிராப்பள்ளி
மார்ச் 9 முதல் 11 வரை, 2012




**திருச்சிராப்பள்ளி**: பவளவிழா மேடையில் சிறப்பு விருந்தினர்கள் சிவபாபா கொடியசைத்து அனைவரையும் வரவேற்று வாழ்த்துகின்ற காட்சி




விழா மேடையில் (இ.வ): பி.கு., பீனாஜி, Dr. R. ராமசுப்பு அவர்கள், தினமலர் அசோஷியேட் எடிட்டர், இராஜயோகினி பி.கு ஆஷாஜி, பி.கு. கலாவதிஜி இராஜயோகி, J.V. குங்கினி, Executive Director டால்மியா சிமெண்ட்ஸ் (பாரத்) லிட், Dr. கிரீஷ் பட்டேல் ஆகியோர்



திருச்சி கலைஞர் அறிவாலயம் இளைஞர்களுக்கான விசேஷ நிகழ்ச்சி மேடையில் (இ.வ.) பி.கு. பாரி, மாவுண்ட் அபு, பி.கு. உமா, திருவண்ணாமலை, திரு. A. கலியமூர்த்தி, IPS பி.கு. மல்லிகா, திருச்சி, பி.கு. வெங்கடேஷ், மவுண்ட் அபு ஆகியோர்.



திருச்சி: கலைஞர் அறிவாலயம் இளைஞர்களுக்கான விசேஷ நிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவ, மாணவியர்



திரு. A. கலியமூர்த்தி, IPS அவர்களுக்கு பி.கு. உமா இறை அன்பளிப்பு வழங்குகிறார்.




பங்கு பெற்ற மாணவ, மாணவியர் ஆர்வத்துடன் நற்பண்புகளை தேர்ந்தெடுத்து நற்பண்புகள் மரத்தில் பொருத்தும் காட்சி



திருச்சி: டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையில் அலுவலர்களுக்கு - Health in Your Hands எனும் நிகழ்ச்சியில் இராஜயோகி டாக்டர் கிரீஷ்பட்டேல் உரை நிகழ்த்துகிறார்.



திருச்சி மேல் சிந்தாமணி - ஸ்ரீ சிதம்பரம் மஹால் Health in Your Hands எனும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களுக்கு இராஜயோகி டாக்டர் கிரீஷ்பட்டேல் பயிற்சியளிக்கிறார்.




**திருச்சிராப்பள்ளி**: பவளவிழா மேடையில் இராஜயோகினி பிரம்மா குமாரி ஆஷாஜி அவர்களிடமிருந்து இறை நினைவு அன்பளிப்பு பெறும் சிறப்பு விருந்தினர்கள். (இ.வ) J.V. குங்கினி, Executive Director டால்மியா சிமெண்ட்ஸ் (பாரத்) லிட், Dr. R. ராமசுப்பு அவர்கள், தினமலர் அசோஷியேட் எடிட்டர், மற்றும் கலைமாமணி திருமதி ரேவதி முத்துச்சாமி அவர்கள்.

**தலையங்கம்**

## முக்தி உண்டு, மோக்ஷம் இல்லை

முக்தி என்றால் என்ன? மோக்ஷம் என்றால் என்ன? என்பதைப் பற்றிய உண்மை யான பொருள் விளக்கம் இன்றைய சங்கமயுகத் தில், இப்போது தான் நமக்கு கிடைக்கின்றது. பகவான் வாக்கு: முக்தி என்பது ஒவ்வொரு கல்பத்தின் இறுதியிலும், நாடக முடிவில் எல்லா ஆத்மாக்களுக்கும் பிறவியின் பந்தனத்திலி ருந்து கிடைக்கின்ற இடைக்கால விடுதலை யைக் குறிப்பதாக இருக்கின்றது. அதாவது பிறவி, மறுபிறவி என்ற தொடர்ச்சி ஒவ்வொரு கல்பத்திலும் முடிகிறது. ஆதலால் ஆத்மாக்கள் ஆத்ம லோகம் என்ற தங்கள் வீட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். சிறிது ஓய்விற்குப் பின்னர் தத்தம் பாத்திரத்தில் நடிப்பதற்காக, மீண்டும் பூலோக நாடக மேடைக்கு வர வேண்டும். அதாவது அடுத்து வரும் கல்பத்தில் நாடகத்தின் முதல் காட்சி ஆரம்ப மாகிறது. இப்படி நிச்சயிக்கப்பட்டதாக இருக்கின்றது.

மோக்ஷம் என்பது இனி மறுபிறவி இல்லை. பிறவியிலிருந்து முற்றிலும் விடுதலை என்பதைக் குறிக்கும் சொல்லாகும். உலக நாடகம் சாசுவதமானது. ஆத்மாக்களும் சாசுவதமானவை. ஆதலால் மோக்ஷம் என்பது இல்லை. இதைப் புரிந்து கொள்வது அவசியமாகிறது. ஏனெனில் இனி எனக்குப் பிறவியே வேண்டாம் என்று விரக்தியில் கூறுவோர் சிலர் உண்டு.

உலகில் உள்ள மனிதர் ஒவ்வொருவரும் ஒரு ஆத்மா தான். ஆத்மா உருவத்தில், ஒரு புள்ளி வடிவில் பிரகாசிப்பதாக இருக்கிறது. எல்லையற்ற உலக நாடகத்தில் கட்டுப்பட்ட தாகவும் இருக்கின்றது. இதன் மூலம் ஆத்மாவுக்கு அழிவில்லை என்பது தெளிவா கிறது. ஆதலால் பிறவியிலிருந்து

NeLUÙLm

ùTôÚ [PdLm

மலர்: 26 ஏப்ரல் 12 - மே 12 இதழ்: 1

1. தலையங்கம் 01
2. பகவான் வாக்கு 04
3. ஜுவாலாமுகி யோகம் 05
4. கவலை கொள்வது சுபாவமா? 09
5. ஆற்றல் சக்திகள் 11
6. உலக போதை ஒழிப்பு நாள் 19
7. எனது கேள்வியும் இறைவனின் பதிலும் 23
8. பரிபக்குவ நிலை 28
9. கலியுகம் குட் பை... 30
10. பெருமிதம் 32

இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப்பட்டவையாகும்.

ஆசிரியர்

"ç nûUúV
NeLUÙLj§u Bv§"

என்றென்றைக்கும் முற்றிலுமாக விடுதலை என்பது சாத்தியமில்லை. ஜன்ம மரணச் சக்கரத் திலிருந்து விடுபட்டவராக, சதா அசரீரியாக இருக்கின்ற பரமாத்மாவாகிய இறைவனும் உலக நாடகத்தில் கட்டுப்பட்ட வராக, முக்தி ஜீவன் முக்தியளிக்கும் தன் கடமையை நிறை வேற்ற வருகின்றார் என்ற உண்மையையும் மனதிற்கொள்ளாமல் இருக்க முடியாது.

உலக நாடகத்தில் வெவ்வேறு கால கட்டங்களில், முன் பின்னாக அவரவர் பாத்திரத்தில் அந்தந்த சமயத்தில் நடிப்பதற்காக எல்லா ஆத்மாக்களும் வருகின்றனர். பூலோக நாடகம் எனும் வாழ்க்கைப் பயணத்தில் தங்கள் சக்திகளையும் இழந்து விடுகின்றனர். கல்ப முடிவில் பரமாத்மாவின் அவதாரத்தின் போது மீண்டும் அவர் மூலமாகவே இழந்த சக்தி களையும் பெறுகின்றனர். இவ்வாறு பரமாத்மா விடமிருந்து ஆத்மாக்கள் சக்திகளை ஆஸ்தி யாகப் பெறுகின்ற காரணத்தால் தந்தையின் சொத்து குழந்தைக்கு என்ற சம்மந்தத்தில் ஆத்மாக்களுக்கு, பரமாத்மா தந்தை ஆகின்றார். ஆத்மா மற்றும் பரமாத்மாவின் இருப்பிடம் ஒன்று தான். இது ஆறாவது ஒளி தத்துவம். இது பிரம்ம லோகம், பரலோகம், ஆத்ம லோகம், பரந்தாமம், சாந்தி தாமம் என்று பல பெயர்களில் பிரசித்தமாகியிருக்கின்றது. இங்கு ஆத்மாக்களும் பரமாத்மாவும் ஒருவர்க் கொருவர் சம்மந்தம் கொண்டிருப்பதில்லை. சந்திப்பது, சம்மந்தம் கொள்வது பூலோக நாடக மேடையில் தான். ஒவ்வொரு கல்பத்திலும், ஒரே ஒரு முறை தான்.

ஆத்மாவுக்கு சரீரம் என்னும் ஆதாரம் உண்டு. ஆதலால் அறிமுகமும் உண்டு. ஆனால் பரமாத்மா அசரீரி (நிராகார்) ஆதலால் அவரைப்பற்றிய அறிமுகத்தை அவர் மூலமாகவே அறிய வேண்டும். பகவான் வாக்கு ஒவ்வொரு கல்பத்திலும் கலியுக இறுதியான சங்கமயுகத்தில் அதர்மத்தை அழித்து, தர்மத்தைப் படைக்கும் தனது கடமையை நிறைவேற்றும் பூலோக நாடகத்தில் கட்டுப்பட்டிருக்கின்றேன். அசரீரியான நான் பரகாய பிரவேசம் மூலம் எனது அறிமுகத்தை நானே அளிக்கின்றேன் என்பது அவர் கூற்றாக இருக்கின்றது. அச்சமயத்தில் தான், ஆதாரமாக எடுத்துக் கொண்ட அந்த சரீரத்தின் வாய்மொழி கர்மேந்திரியம் மூலமாக ஜோதி சொரூபம் சிவோஹம் என்ற தனது அறிமுகத்தை அளிக்கின்றார். தான் ஆதாரமாக ஆட்கொண்ட அந்த மனிதருக்கு பிரம்மா எனவும் பெயர் சூட்டுகின்றார். தர்மத்தைப் படைக்கும் தனது கைங்கர்யத்தில் பிரம்மாவைக் கருவியாகவும், தனது முதல் வாரிசு குழந்தையாகவும் ஆக்கிக் கொண்டிருக்கின்றார். இதன் மூலம் பிரம்மா, சிவபரமாத்மாவின் குழந்தையாக இருக்கின்ற அதே சமயம், மனித குலத்தின் தந்தையாகவும் ஆகிவிடுகின்றார். அதாவது, மனித குலத்தை புது யுகத்திற்கு தயார் செய்யும் சிவபரமாத்மா வின் கடமையில் அவரது உற்ற கருவியாகவும், துணையாகவும், ஆத்ம அபிமானியாகவும் ஆகியிருக்கின்ற முதல் மனிதர் பிரம்மாவாக இருக்கின்றார்.

ஆதலால் நிராகார் பரம தந்தையாகிய சிவன், பிரம்மா வாய்மொழி மூலம் அருளிய ஞானமும், அறிவுரைகளுமே உண்மையான கீதை. சிவபகவான் அருளிய ஞான கீதமாதலால் இது ஸ்ரீமத் பகவத் கீதை என வழங்க லாயிற்று. மகா பாரதப்புகழ் அர்ஜுனன் பிரம்மாவைக் குறிக்கும் உருவகமே. இது போலவே உருவகப்படுத்தப்பட்டிருக்கின்ற சாரதியும், இரதமும் தந்தை மற்றும் மகன் என்பதன் உருவகமே. சிவபரமாத்மா, பிரம்மா உடலில் பரகாய பிரவேசம் செய்த உடனேயே பிரம்மா (அர்ஜுன்) அந்த பரம சக்தியிடம் தன்னை சம்பூரணமாக அர்ப்பணித்துவிட்டார். பிரம்மாவாகிய இரதம், பரமாத்மாவாகிய சாரதி யிடம் அடைக்கலம் ஆகிவிட்டது. அதாவது யார் வசம் குதிரைகளை (மனம்) அடக்கும்

அதிகாரம் இருக்கின்றதோ அவரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மேலும் இரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகள் வெண்மை நிறத்தில் தேஜோமயமாக ஜொலிப்பதாகவும், கடலையும், மலைகளையும் தாண்டக்கூடிய வலிமையுடையதாகவும் இருக்கின்றது என உருவகப்படுத்தியிருப்பது, மனமானது பூலோக சக்தியின் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது என்பதைக் குறிப்பதாக இருக்கிறது. இதன் மூலம் மனதை புத்தியின் அதிகாரத்தின் மூலமே கட்டுப்படுத்த முடியும் என்பதோடு எப்போது புத்தியானது சிவபரமாத்மாவிடம் சம்பூரணமாக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறதோ, அப்போது தான் இது சாத்தியம் என்ற சத்திய ஞானத்தை உள்ளடக்கியிருப்பதும் விளங்குகிறது. ஆதலால் மனதை வெல்லும் யுக்தியும், இந்த யுக்தியின் மூலம் உலகை வெல்லும் சக்தியும் அடைய முடியும் என்ற இதன் பலனும் அடங்கியது தான் ஸ்ரீமத் பகவத் கீதையின் சாராம்சமாக இருக்கின்றது.

**திருச்சிராப்பள்ளி சென்டர் பவள விழா பிரதம விருந்தினராகப் பங்கு பெற்ற இராஜயோகினி பிரம்மா குமாரி ஆஷாஜி அவர்களின் அறிமுகம்**

டில்லியில் பிறந்த ஆஷாஜி இளம் பிராயத்திலேயே பிரம்மாகுமாரிகள் இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டு தனது வாழ்க்கையை ஆன்மிக, அமைதிப் பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்.



1985-ல் நைரோபியில் நடைபெற்ற ஐ.நா.வின் பெண்களுக்கான 10 ஆண்டுகள் -- மாநாட்டில் பிரம்மாகுமாரிகள் சார்பில் பங்கேற்றார். 1989-ல் ஜுனியர் சேம்பர் இண்டர்நேஷனல் இவருக்கு இளம் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தது.

பிரம்மாகுமாரிகள் இயக்கத்தின் சிறப்புப் பேச்சாளர்களில் ஒருவரான ஆஷாஜி, இந்தியா முழுவதும் மட்டுமன்றி உலகில் பல நாடுகளுக்கு விஜயம் செய்து, பல தலைப்புகளில் உரையாற்றியுள்ளார். பல வானொலிகள், தொலைக்காட்சிகளிலும் உரை நிகழ்த்தியுள்ளார்.

தற்போது டில்லியிலுள்ள 30 ஏக்கர் பரப்பிலான ஓம்சாந்தி சிறப்புப் பயிற்சி வளாகத்தின் இயக்குநராக உள்ளார்.

இயக்கத்தின் நிர்வாகத் துறையினருக்கான சேவைப் பிரிவின் தேசீய ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார்.

புதியதாய் வரும் இராஜயோக டீச்சர்களுக்கான சிறப்புப் பயிற்சி அளிப்பதிலும் வல்லவராவார்.

## GÕ EVokRÕ...

**சொல்வதைக் காட்டிலும் செய்வதே உயர்ந்தது !**
**தெரிந்திருப்பதைக் காட்டிலும் ஏற்று நடப்பதே உயர்ந்தது !**
**படிப்பதை விட குணவானாவது உயர்ந்தது !**
**சப்தத்தைக் காட்டிலும் நிசப்தம் உயர்ந்தது !**

# பகவான் வாக்கு



அமைதி, அன்பு, ஆனந்தம் ஆகிய அனுபவங்களின் திறவு கோல் ஆத்மாவின் இயல்பைப் புரிந்து கொள்வதில் ஆதாரப்பட்டதாக இருக்கின்றது. ஆத்மாவின் உண்மை நிலை ஓம் சாந்தி என்ற சொற்றொடர் மூலம் புரியும் அறிமுகம் ஆகும். நான் ஆத்மா, சாந்த சொரூபம் என்பது தான். இதுவே ஆத்மாவின் ஆதி மதம். ஆதலால் இந்த அனுபவ நிலையில் இருப்பது தான் ஆத்ம அபிமானி நிலையாகும். ஆத்ம அபிமானி நிலையானது, ஆத்மாவின் மாசுகளைக் களைவதிலும், குற்றமுள்ள ஆசைகளிலிருந்து விடுவித்துக் கொள்வதிலும் ஆத்மாவுக்குப் பெரிதும் உதவுகிறது.

பிரம்மா குமாரிகள் மற்றும் பிரம்மா குமாரர்கள் பிரம்மா பாபா என்று மிகவும் அன்போடு அழைக்கின்ற பிரஜாபிதா பிரம்மா தான் ஆத்ம அபிமானி நிலை அடைந்த முதல் மனிதர் ஆவார். இவர் மூலமாகவே பரமாத்மா தன்னை ஜோதி சொரூபம் சிவோஹம், நிஜானந்த சொரூபம் சிவோஹம் என்று தனது அறிமுகத்தை அளித்து, மனிதன் தேவனாகும் ஞான அமிர்தத்தையும் பருகச் செய்து சகஜ இராஜயோகத்தையும் கற்பித்தார். பிரம்மா பாபாவை நாடி வரும் ஒவ்வொருவரும் ஆத்ம அபிமானி நிலையை அனுபவம் செய்தனர். காரணம், இந்த ஆத்ம அபிமானி நிலை என்பது கிட்டவரும் எவரையும், தொற்றிக் கொள்ளும் ஒட்டுவாரொட்டி போன்றது. அதாவது சங்-கா-ரங் எனலாம்.

---

**சாதனத்தைக்காட்டிலும் சாதனையே உயர்ந்தது !**
**தேகபலத்தைக் காட்டிலும் யோகபலம் உயர்ந்தது**

**அதிஷ்டத்தை காட்டிலும் முயற்சியே உயர்ந்தது**
**பாவனையைக் காட்டிலும் காரியமே உயர்ந்தது**

# ஜுவாலாமுகி யோகம்

- நன்றி பியூரிட்டி இதழ்



ஜுவாலாமுகி யோக சக்தியானது ஆழமாக வேறூன்றி விட்ட சம்ஸ்காரத்தையும் பஸ்மம் செய்து நன்மை செய்யக்கூடியதாகும்.

தற்காலத்தில் தியானம் செய்வதில் விருப்பமுள்ளவர்கள் அநேகர் இருக்கின்றனர். எனினும் ஒரு சிலரது நோக்கம் அலுவலின் மனச்சுமையைத் தளர்த்திக் கொள்வதன் மூலம் சற்று ஓய்வாக அனுபவம் செய்ய வேண்டுமென்பதாகவும் இருப்பது தெரிகிறது.

பொதுவாக, தியானம் செய்வதன் மூலம் இரத்த அழுத்தத்தை செம்மையாக்கவும், கொழுப்புப் பொருளின் அளவைக் குறைக்கவும் நோய் எதிர்ப்பு சக்தியை விருத்தி செய்யவும் வயோதிகப் பருவ முதிர்ச்சியின் வேகத்தை மட்டுப்படுத்தவும் போன்ற நல் ஆரோக்கியத்திற்கும் உதவுவதாகத் தெரிகிறது.

எனினும் தியானம் நல் ஆரோக்கியத்திற்கு எந்த வகையில் உதவி செய்கிறது என்பதைப்பற்றி மருத்துவர்கள் இன்னும் சரியாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் மன அழுத்தம் குறைகிறது என்பது இதில் முக்கிய அம்சமாக இருக்கின்றது. ஏனெனில் திடீர் மரணத்தை உண்டாக்கும் நவீன ரக நோய்களுக்குப் பெரிதும் காரணமாயிருப்பது மன அழுத்தம் என்பது தான்.

தியானத்தின் மூலம் மனக்கவலை, மன இறுக்கம் போன்ற வியாகூலத்திலிருந்து விடுபட்டிப்பதோடு கூடவே, எரிச்சல், மன உறுதியின்மை, நல்ல ஞாபக சக்தி, படிப்பில் திறமை மற்றும் உணர்ச்சி வசப்படாமலிருப்பது போன்ற மனோ தத்துவ ரீதியாகவும் உதவுவதாக இருக்கின்றது.

இவ்வாறாக தியானத்தின் அனுகூலம் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறோம். எனினும் தியானம் செய்யும் பழக்கத்தை நடைமுறையில் கொண்டு வந்து விடும்போது அடையக்கூடிய பலாபலன்கள் மிக அதிகம் என்றே தோன்றுகிறது. குறிப்பாக பாதகமான பழக்கத்திலிருந்து எதிர்மறையான மனோ பாவத்திலிருந்து விடுவிக்கும். மேலும் தியானத்தின் மூலம் அடையப்பெறுகின்ற ஆன்மீக சக்தியானது மகிழ்ச்சியும், திருப்தியும் கூடிய வாழ்க்கை வாழ உதவியாயிருக்கின்றது.

தற்காலத்தில் சிலருடைய சிந்தனை, அணுகுமுறை, பழக்க வழக்கம் ஆகியவற்றைப் பார்க்கும்போது, தங்களுடைய சுபாவத்தின் தாக்கம் காரணமாக தெரிந்தோ, தெரியாமலோ தங்களையே வருத்திக் கொள்வதையும் பார்க்க முடிகிறது. இது தங்களுக்கும், மற்றவருக்கும் கூட கேடு விளைவிக்கிறது என்ற புரிந்துணர்வு இல்லாதவர்களாகவும் இருக்கின்றார்கள். எனினும் தங்களைப்பற்றிப்புரிந்து கொள்ளக் கூடியவர்கள், தங்களுடைய பலவீனத்திலிருந்து விடுபடுவதற்கான முயற்சி செய்வதையும் காணமுடிகிறது.

முயற்சி செய்தாலும் கூட தங்களுடைய சுபாவத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியாத நிலையிலும், சிலர் இருப்பதைப் பார்க்கும்போது அந்த சுபாவம் எவ்வளவு ஆழமாக ஆத்மாவில் இறுகப் படிந்து விட்டது என்று நினைக்க வேண்டியதாக இருக்கின்றது.

உண்மை என்னவெனில், பலபிறவிகளில் எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் ஆகியவற்றின் மூலம் பதிவாகியிருக்கின்ற அனுபவங்கள் அனைத்தும் ஆத்மாவில்

அடங்கியிருக்கின்றன என்பது தான். இதற்கு முந்தைய பிறவிகளில் உள் மனதில் பதிவாகி சேமிப்பாகியிருக்கின்ற அனுபவங்கள், பலவித உணர்வுகளாக அவ்வப்போது வெளிப்படு கின்றன. உதாரணமாக உயர்ந்தோர் என்ற மனப்பாங்கு, பயம், ஆசைகள், பழக்க வழக்கங்கள் ஆகியன. இவை நமது தற்போதைய எண்ணங்களில், பேச்சில், அணுகுமுறையில் நம்மையறியாமலேயே பிரதிபலிக்கின்றன.

தங்களுடைய பழக்க வழக்கம், அணுகுமுறை மற்றும் நடத்தையில் அக்கறை யுள்ள சிலர் தங்களைப் பற்றி ஆய்வு செய்து, தவறுகளைத் திருத்திக் கொண்டு மாற்றம் கொண்டு வந்து கொண்டுமிருக்கிறார்கள். உதாரணமாக, தங்களிடம் உணர்ச்சி வசப்படும் அல்லது கோப வசப்படும் சுபாவம் இருக்கிறது என்பதை உணர்ந்தவர்கள், அந்த சமயத்தில், தங்களை அடக்கிக் கொண்டு, பிறரைத் திருப்திப்படுத்துவதற்காக மகிழ்ச்சியாக இருப்பதுபோல முகத்தை வைத்துக் கொள்ளலாம். இது போதாது. ஏனெனில் ஆழமாகப் படிந்துவிட்ட கோப உணர்வை அடக்குவது ஆபத்தானது. இவ்வாறு உணர்வை அடக்கினால் இது மனதின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தும். மேலும் எதிர்பாராத சூழ்நிலையில், விரும்பத்தகாத முறையிலும் வெளிப்படக்கூடும்.

கோபத்திலிருந்து விடுபட வேண்டு மென்று விரும்பினால், இது ஆழமாகப் படிந்திருக்கும் ஆத்மாவிலிருந்தே நீக்கப்பட்டு விட வேண்டும். இதற்கான சரியான வழி, **முறையான இராஜயோக** தியானமே ஆகும்.

இராஜயோக தியானத்தில் ஒருவர் தன்னைப்பற்றிய உண்மையான அறிமுகத்தைப் பற்றி தெரிந்து கொள்கிறார். அதாவது தான் ஒரு அழிவற்ற ஆத்மா என்பது. பின்னர் ஆத்மாவாகிய தன்னை பரமாத்மாவாகிய இறைவனோடு, எண்ணத்தின் மூலம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றார். இந்தத் தொடர்பின் மூலம், தன்னைப்பற்றியும், பரமாத்மாவின் குணங்கள் மற்றும் சக்திகளைப்பற்றிய சிந்தனையில் ஆழமாக மூழ்கிவிடும்போது, தன்னுடைய உண்மையான தன்மைகளைப்பற்றி அறிந்து கொள்ள உதவியாயிருக்கிறது. மேலும் பரமாத்மாவாகிய இறைவனுடன் கூடிய மானசீக தொடர்பின் மூலம் அமைதி, அன்பு, தூய்மை, உண்மை ஆகிய நற்பண்புகள் ஆத்மாவில் சக்திக்கிரணங் களின் ரூபத்தில் ஆட்கொண்டு ஆத்மாவை சக்திசாலியாகவும், பண்பு நிறைந்ததாகவும் ஆக்கிக் கொண்டிருப்பதை அனுபவம் செய்கின்றனர். இவ்வாறு தியானம் செய்வது, ஆத்மாவில் நெருப்பை மூட்டுவதற்குச் சமமாகும். இந்த நெருப்பானது, இதுவரையிலும் பலகாலமாக ஆத்மாவில் இறுகிப்போயிருக் கின்ற வேண்டாத அழுக்குகள், உணர்வுகள், சுபாவங்கள், பழக்கங்கள் அனைத்தையும், பொற்கொல்லன் தங்கத்தை சுத்தப்படுத்து வதற்காக நெருப்பில் புடம் போடுவதைப்போல, பஸ்மம் செய்துவிடுகிறது. அதாவது பலபிறவிகளாக ஆத்மாவில் படிந்துவிட்ட அழுக்குகளை நீக்கி ஆத்மாவைத் தூய்மை யாக்குவதற்கு தீவிர தியான முயற்சியில் ஈடுபட்டிருப்பது அவசியமாகிறது.

இம்மாதிரியான தியானம் ஜுவாலா முகி தியானம் எனப்படுகிறது. உதாரணமாக எரிமலையில் அதன் உட்பகுதியில் உண்டாகியிருக்கும் அக்னிக்குழம்பானது, பாறையையும் உருக்கிக் குழம்பாக மாற்றி மிகுந்த அழுத்தத்துடன் அந்த அழுக்கை வெளியில் வேகமாக, தொலை தூரம் தூக்கி யெறியக்கூடிய சக்தியுடையதாக இருப்பதைப் போன்ற சக்தியை தியானத்தின் மூலம் உருவாக்க வேண்டும். இதன் மூலமே ஆத்மாவில் இறுகப்படிந்துவிட்ட அழுக்கை நீக்கி சுத்தப்படுத்த முடியும் என்பதாகும்.

உதாரணமாக எரிமலையில் அதன் அக்னிக்குழம்பு உள்ளேயே இருக்கிறதே யொழிய வெளியிலிருந்து நெருப்பு பற்ற வைக்கப்படுவதில்லை. இதுபோலவே தான் ஆத்மாவில் பற்ற வைக்கப்படும் நெருப்பும் உள்ளுக்குள்ளேயே தியானத்தின் மூலம் உருவாக்கப்படும் விழிப்புணர்வும், சக்தியுமாகும்.

ஜுவாலாமுகி யோகம் செய்வதற்காக, முதலில் தன்னைப் பற்றிய ஆழமான சிந்தனையில் மூழ்கி என்னென்ன எதிர்மறை யான வீணான எண்ணங்கள் இருக்கின்றதோ, அவற்றை நீக்கி மனதை அதிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதாகும். மேலும் ஆத்ம அபிமானி நிலையடைவதற் கான பயிற்சியும் செய்ய வேண்டும். தன்னை ஆத்மாவாக உணர்வதும், மற்றவரையும் ஒரு ஆத்மா என்று உணர்வதும், ஆத்ம உணர்வு நிலையை உறுதி செய்ய உதவுகிறது.

மாறாக, நாள் முழுவதும் மற்றவர்கள் சுபாவம் எப்படி இருக்கிறது எப்படி நடந்து கொள்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதையே பார்த்துக் கொண்டிருந்தால், என்ன ஆகும். வீணானதையே சேமித்துக் கொண்டிருக்கிறோம் என்பதாகிறது. மேலும் மற்றவர் குறை காண்பதில் ஆர்வம் காட்டுவதும், உணர்ச்சி வசப்பட்டு பேசுவதும், கர்வம் கொள்வதும், தன்னிடமுள்ள பலவீனத்தை ஏற்க மறுப்பதும், நேரத்தை வீணடிப்பதோடு, எதிர்மறை விளைவுகளையே சேமிக்கிறோம் என்பதாகும். இதன் காரணமாக ஆத்ம சக்தியையும் இழந்து விடுகிறோம்.

யோகம் சக்திசாலியாக இருக்க வேண்டு மென்றால், முழு நாளும் மனநிலையை சாந்தமாக வைத்துக் கொள்வதில் கவனம் வேண்டும். மாறாக மனதில் வீணான சேமிப்பிருந்தால், யோகம் செய்யும் போது அது தான் வெளியில் வரும்.

தியானத்திற்கு முக்கியமானது வீணான வற்றிலிருந்து எப்போதுமே விடுபட்டு சுதந்திர மாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் சிலசமயம் கவனமாக இருப்பதும், சில சமயம் கவனப்பிசகாக நடப்பதுமாக இருந்தால் இவ்விதப் பழக்கமானது ஆத்ம சக்தியைக் குறைத்துவிடும்.

குறிப்பாக மனம் சக்திசாலியாக இருப்பதற்கு எண்ணங்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருத்தல் அவசியம். பொதுவாக ஒரு மனிதன் ஒரு நிமிடத்தில் 20-25 எண்ணங் களை உருவாக்குகிறான். ஜுவாலாமுகி யோக நிலைக்கு இந்த எண்ணிக்கையை எந்த அளவு குறைக்க வேண்டும்?

மனதை ஆத்மாவின் உண்மையான குணங்களைப் பற்றியோ சில நிமிடங்கள் சிந்தித்தாலே ஆத்மாவில் குணங்களின் சக்தி நிரம்புவதை அனுபவம் செய்ய முடியும். அதாவது ஆத்மாவில் அமைதி அன்பு, தூய்மை ஆகிய சக்திகள் நிரம்பும். இவ்வாறு, ஆத்மா இந்த நற்பண்புகள் மற்றும் சக்திகளால் நிரம்பிவிடும்போது ஆத்மாவின் கறைகள் நீக்கப்பட்டுவிடும். இம்மாதிரியான ஜுவாலா முகி யோகத்தின் மூலமே விரும்புகின்ற நல்ல மாற்றத்தை நிரந்தரமாக்கிக் கொள்ள முடியும். எப்படி, சூளையில் இடப்பட்ட களி மண் கட்டிகள் பலமான செங்கற்களாக மாறிவிடு வதைப் போல, யோக அக்னியும் எண்ணங் களுக்குப் போதுமான பலத்தையும், சக்தியை யும் கொடுத்து, பழைய வீணான சுபாவ சம்ஸ்காரங்களில் மாற்றம் உண்டாக்குவதற்கு உதவுகிறது. சாதாரணமான எண்ணம் இத்தகைய மாற்றத்தை உண்டாக்காது. சாதாரண எண்ணத்தின் மூலமான யோகம் சாதாரண மானதும், தற்காலிகமானதுமான அனுபவத் தையே தர முடியும். மேலும் ஒருவேளை மீண்டும் பழைய சுபாவத்திற்கே திரும்பி விடவும் வழி கோலும்.

ஆதலால் சக்திசாலியான யோகம் எப்போதும் எளிதாகவே இருக்க வேண்டு மானால் தொடர்ந்து விடா முயற்சியுடன் யோகம் செய்ய வேண்டியது அவசியம். நல்லெண்ணம் உடையவராகவே தொடர்ந்து இருக்க வேண்டும். இவ்வாறு தினந்தோறும் செய்து வந்தால், மனம் இயல்பாகவே அமைதியாக இருக்கும். பாரமற்றதாகவும் அனுபவம் ஆகும். இதனால் நமது எண்ணம், சொல், செயல் அணுகுமுறை மிக நல்ல மாற்றமுடையதாக ஆகிவிடும். மேலும் நல்ல ஆக்கப்பூர்வமான சிந்தனையுள்ளவர்களுடைய தொடர்பும் உதவக்கூடியதாக இருக்கும். இது ஒருவருக்கு வெளிப்புறமிருந்து கிடைக்கக்கூடிய ஆதரவோடு எதிர்மறை சிந்தனையிலிருந்து விடுபட்டு பாதுகாப்பாக இருக்கவும் உதவுகிறது. இம்மாதிரியான உதவி நாம் நம்மை சக்திசாலி யானவராக ஆக்கிக் கொள்ளும் வரை தேவைப்படும்.

ஜுவாலாமுகி அல்லது சக்திசாலியான யோகம் என்பது தன்னை ஒரு சக்திசாலியான ஆத்மா என்று நினைப்பது அல்லது பரமாத்மாவிடமிருந்து யோகத்தின் மூலம் சக்திகளைப் பெறுவது என்று பொருளல்ல. சக்திகள் என்றால் தூய்மை, அன்பு அமைதி மற்றும் பொறுத்துக் கொள்ளுதல் ஆகியனவாக இருக்கலாம். அதாவது இவ்வாறான எந்த ஒரு நல்ல பண்பும் வலிமையுடையதாக ஆகிவிட வேண்டும். அதாவது இந்த ஒவ்வொரு நற்பண்பும் எரிமலையின் சக்தியைப் போன்று பாதுகாப்பளிப்பதாக ஆகிவிட வேண்டும்.

ஆத்மாக்கள் சிலரிடம் இத்தகைய சக்தி நிறைந்த பண்புகள் இருக்கும். ஆனால் இதை அறியாதவர்களாக, இந்த சக்தியை தனக்காகவோ அல்லது பிறருக்காகவோ பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்கிறார்கள். இது எரிமலையில் அக்னிக்குழம்பிருந்தும், அது தனது சக்தியை வெளிப்படுத்தாமல் அமைதியாக இருந்து விட்டால் என்ன பயன்? இது போல எரிமலைக் குழம்பாக இருந்தும் அமைதியாக இருக்கிறார்கள் இதில் இன்னொரு வகையினர் சக்திசாலி ஆத்மாக்களாக இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் சில சமயம் எப்போதாவது தங்கள் சக்தியைப் பயன்படுத்து பவர்களாக இருக்கிறார்கள். இது எரிமலையானது சிலசமயம் மட்டும் புகையை யோ, அல்லது சிறிது நெருப்பையோ வெளியில் கக்குவதைப் போன்றதாகும்.

ஆனால் உண்மையிலேயே சக்திசாலியான ஆத்மாக்கள், எவ்வாறு எரிமலை குமுறி சாம்பலையும் நெருப்பையும் வேகமாக வெளியில் தள்ளுகிறதோ, அதுபோல வெளியில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டேயிருப்பார்கள். இவர்கள் தங்களை பரிவர்த்தனை செய்து கொள்வதோடு மட்டுமல்லாமல், தங்களை நாடி வரும் மற்றவரும் தன்னைப்போன்ற மாற்றம் கொண்டுவருவதில் உதவி செய்பவர்களாக இருப்பார்கள். மேலும் இவர்களிடமிருந்து அன்பு, அமைதி, பொறுமை, உண்மை அதிர்வலைகளைப் பரப்புவதன் மூலம் மற்றவர்களிடம் பிரபாவத்தை உண்டாக்குபவர் களாகவும் இருப்பார்கள்.

இத்தகைய ஆத்மாக்கள் பெரும்பாலா னோரின் பரிவர்த்தனைக்கு நிமித்தமானவர் களாக இருக்கிறார்கள். ஆதலால் இவர்கள் தேவதைகளைப் போல வாழ்ந்து கொண்டிருப் பவர்கள் ஆவார்கள். எப்படி, கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் மூர்த்திகள் நம்பிக்கையோடு வரும் பக்தர்களின் மனோ விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்றதோ, அதுபோல மனித குல நன்மையின் பொருட்டு தங்களுடைய ஜுவாலாமுகி யோக சக்தியின் அதிர்வலைகளை நாலாபுறமும் பரவச் செய்து கொண்டேயிருப்பார்கள்.

# கவலை கொள்வது சுபாவமா?

பி.கு. பசுபதி, கோயம்பத்தூர்



**கவலை என்பது க + வலை.** அதாவது ஒருவர் தானாகவே மாட்டிக் கொள்ளும் வலை. பிறகு அதில் இருந்து விடுவிக்க முயற்சி செய்து பல வலைகளில் மாட்டிக் கொண்டு பிறகு அந்த கவலையிலேயே மூழ்கியிருக்கின்றான்.

கவலை ஏற்பட காரணம் என்னவெனில் முதலில் தனது எதிர்காலத்தின் மீது ஏற்படும் பயம். எங்கு பயம் இருக்கின்றதோ அங்கு தானாகவே கவலை வந்துவிடும். மேலும் ஏதாவது இழப்பு, உதவியற்ற நிலை, உடல் நோய் சிறிது அதிகமாக இருந்தால், ஒவ்வொரு செயலிலும் எதிர்பார்ப்போ அல்லது ஏமாற்றமோ இருந்தால் இந்த கவலை உடனே வந்துவிடும். தான் வைத்திருக்கும் லட்சியத்தினை அடைவதில் சிறிது தாமதமோ அல்லது இழப்போ ஏற்பட்டால் கூட கவலையில் மூழ்கிவிடுகின்றார்கள். இவர்கள் சுய நம்பிக்கையும், இறை நம்பிக்கையும் குறைந்தவர்களாக இருப்பார்கள்.

மேலும் திறமை கொண்ட ஒருவர் தான் ஏற்று நடத்தும் காரியத்திற்கு தானே முழு பொறுப்பாளியாக இருந்து செய்கிறார். ஆனால் அந்த பொறுப்பில் தன்னை அறியாமல் பற்றுதல் வந்து விட்டால், எதிர்பார்க்கும் மரியாதையினால் அதில் ஏற்படும் இடர்களை தாங்கும் மனோபலம் இல்லாதவராக ஆகிவிடுகின்றார். தனிமைப்படுத்தவட்டவராக உணர்ந்து விடுகின்றார். அவ்வாறு கவலை கொள்ளும் மனிதன் அமைதியின்மையையும், தன்னை தாழ்வு மனப்பான்மையில் பார்ப்பதையும், அழுகை மூலமாகவும் வெளிப்படுத்துவார். ஆனால் இந்த கவலை என்பது தன்னால் ஏற்பட்டது என்பதை உணராதவராக இருப்பார். இது தற்காலிகமான விஷயம். இதிலிருந்து எவ்வாறு விடுபடுவது என்ற விவேகம் இருந்தால் சந்தோஷமான வாழ்வு வாழ முடியும். ஏனெனில் கவலை என்பது நமது இயற்கையான சுபாவம் அல்ல. ஏற்கனவே கூறப்பட்டது போல் நாமாகவே தேடி மாட்டிக் கொண்ட வலை. இந்த கவலையால் உடல் ரீதியாக பல பாதிப்புகளுக்கு உள்ளாகின்றோம்.

உண்மையில் நமது எண்ணங்களுக்கும், மன நிலைக்கும் ஏற்ப தான் நம் உடலில் இயங்கும் செல்களில் நோய் எதிர்க்கும் சக்தி கூடவோ அல்லது குறையவோ செய்கின்றது. இந்த மாதிரி நோய் எதிர்ப்பு சக்திகள் நமது உடலில் குறைவாகவே உள்ளது. இதன் உதவி நமக்கு நாம் சந்தோஷமாகவும், சிரிக்கும் போதும், மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் போதுமே கிடைக்கின்றது.

கவலைப்படும் போது முக்கியமாக நமது உடலில் மூன்றுவிதமான சுரப்பிகள் சுரப்பது நின்றுவிடுகிறது. அதாவது எண்டார்பின், மெலடோனின் மற்றும் செரடோனின் என்பவையாகும். இதனால் எண்டார்பின் சுரப்பி குறைவால் மன அமைதி இழக்கப் படுகிறது, மெலடோனின் சுரப்பி குறைவால் தூக்க மின்மை, லோ சுகர், லோ பிரஸர் போன்ற நோய்களுக்கு அடிப்படைக் காரணமாகின்றது. செரடோனின் சுரப்பி குறைவால் நம்முள் இருக்கின்ற பூரிப்பு தன்மை, தன்னம்பிக்கை போய்விடுகின்றது. மேலும் சலிப்புத்தன்மை ஏற்படுவதால் இதய நோய்களும், தோல் பிரச்சனைகளையும் ஏற்படுத்துகின்றது. கவலைப்படுவதால் சர்க்கரை நோய் கூட ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக சுவீடன் நாட்டு ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

கவலை, கோபம், பயம் போன்றவை காரணமாக ஒருவர் தன் வாழ்வில் சுகம், சாந்தி, மகிழ்ச்சியை இழக்கின்றார். கவலை என்பது நமக்கு அல்ல. நம்முடைய தேவைகளை அதிகரித்துக் கொள்வதிலும், எதிர்காலத்தை பற்றி வீணாக சிந்தனையில் மூழ்குவதாலும், அதனால் நிகழ்கால நிகழ்வுகளை சரியாக செய்ய முடியாமல் இருப்பதால் தான் இந்த கவலைக்கு முக்கிய காரணமாக இருக்கின்றது

கவலையில்லாமல் இருக்க வேண்டும் என்றால் ஆசைகளில் இருந்து விடுபட வேண்டும் ஏனெனில் அனைத்து துன்பங் களுக்கும் காரணம் ஆசையே என்றார் புத்தர் மகான். பிறர் பொருளை அபகரிப்பதால் கவலையுடன் தான் வாழ முடியும் மேலும் மரணமும் அதனால் நேரிடும் என்பதை சுட்டி காட்டுவது தான் இராமாயண காவியமும், மகாபாரதமும். உலகில் பிறந்த அனைத்து உயிரினங்களும் ஒரு நாள் இறந்து தான் ஆக வேண்டும் என்பது சாசுவதமான சட்டம், இதற்காக நாம் வாழ்கின்ற நாட்களை ஏன் சாகடிக்க வேண்டும்?

**கவலையில் இருந்து விடுபடுவதற்கு சில வழிமுறைகளை காண்போம்.**

1. நடக்கும் விசயங்கள் அனைத்திலும் ஏதோ நன்மை அடங்கியுள்ளது என்ற மன பக்குவத்தில் இருக்கவும்.

2. தாங்க முடியாத கவலை வந்துவிட்டால் இறைவனிடம் உங்கள் கவலைகளை கூறி இலேசாக ஆகிவிடுங்கள்.

3. தன்னை விட பெரியவர்கள், அல்லது தாய் தந்தையரிடம் மட்டும் மனம் திறந்து பேசுங்கள்.

4. தியானம் செய்யுங்கள், இதனால் இறை நம்பிக்கை வளரும், பயம் நீங்கி ஒரு தெளிவு ஏற்படும்.

5. நல்ல சிந்தனைகளைத் தரக்கூடிய இறை நினைவு பாடல்களை கேட்கலாம்.

6. கர்மத்தின் விதியினை நன்கு புரிந்து கொண்டு எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

7. தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள், அதற்காக தன்னிடம் எப்போதும் நேர்மறையான எண்ணங்களை உருவாக்கும் பழக்கத்தை கொண்டு வாருங்கள்

8. கடந்து போன விஷயங்களைப்பற்றி சிந்திப்பதாலோ, பேசுவதாலோ எந்த பயனும் இல்லை ஆதலால் கடந்ததை கடந்ததாக நினைவு செய்து நிகழ்காலத்தில் வாழுங்கள்.

9. சூழ்நிலைக்கு ஏற்ப வளைந்து கொடுத்து தேவைப்படும் இடங்களில் அறிவுரைகள் கூறியும், கேட்டும் நடந்து கொள்ளுங்கள்.

10. தான் எப்போதும் எந்த ஒரு விஷயத்திலும் ஒரு நல்லதை கற்றுக் கொள்கின்றேன் என்ற மன பக்குவத்தை கொண்டு வாருங்கள்.

11. உலக மாற்றத்திற்காக உங்களை முழுமனதுடன் ஈடுபடுத்தி தான் கடவுளுக்கு உதவி செய்கின்றேன் என்ற மன நிலையில் வாழுங்கள்.

12. அனைத்திற்கும் மேலாக தினமும் சிறிது நேரம் இறைவனிடம் தொடர்பு கொண்டு அவர் நினைவில் மூழ்கி விடுங்கள். இதற்கு உதவி செய்வது தான் இராஜயோக தியானம்.

இப்போது நமக்கு தெரியும் கவலை என்பது நமது சுபாவம் அல்ல, நம்மை நரகத்தில் தள்ளிவிடும் பாவம் என்பது. நாம் சுபமான வாழ்க்கை வாழ இறை நினைவு ஒன்றே சிறந்த வழி ஆதலால் இதை உணர்ந்து வாழுங்கள்.

# ஆற்றல் சக்திகள் - செயல்படும் முறை

பி.கு. துர்காபிரசாத், சாந்திவன், அபுமலை

ஒருவருடைய ஆன்மீக விழிப்புணர்வானது (Consciousness) அவருடைய சொந்த ஆற்றல் சக்தியாகும். நாம் அத்தகைய சக்திகளின் அதிகாரிகளாக இருக்கிறோமோ? அதை அடைந்த நிலையில், அந்த ஆற்றல் திறனை உங்களைச் சுற்றிலும் உள்ளவரிடத் திலும், உலகத்திலும், செயலாற்றங்களை (Response) அமைத்துக் கொள்ள உபயோகப் படுத்த இயலும். அவ்வாறு உங்கள் மறு தளிப்பு அளிக்கும் திறமையை வெளிப்படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டீர்களானால், நீங்கள் விரும்பியவாறு உங்கள் ஆற்றல் சக்திகளை செயல்படுத்த முடியும். அவ்வாறாக எட்டு வேறுபட்ட, ஆனால் முக்கியமான வழிகளில் அவற்றை நீங்கள் தெளிவாக வெளிப்படுத்த செயலாற்ற முடியும். அவ்வாறு செயல் ஆற்றும் முறைகள் யாவன என்பதை சிறிது ஆழமாக அறிவோம்.

### (1) ஸ்தூல, சூட்சும இந்திரியங்களின் விருப்பங்களிலிருந்து விடுவித்துக் கொள்ளக்கூடிய அனுபவம் செய்யும் ஆற்றல் (The Power of Withdraw)

உங்களுடைய சுவமானமானது நிகழ் காலத்தில் வெளி உலக காட்சிகள், மனிதர்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றினால் ஈர்க்கப்பட்டு இருப்பதால் பழக்கங்கள், ஆளுமை ஆகியவை அவற்றால் பாதிப்புக்கு உள்ளாக அனுமதித்து விட்டீர்கள். மேலும் குறுகிய காலத்து இன்பத் திற்காக, இந்திரியங்களின் வசத்தில் வந்து விட்டதால், நிலையான அமைதியானது, பாலை வனத்து சோலையாகி விட்டது. இந்த நிலையில் குழப்பமான வெளி உலகத்தை உள் உலகிற்கு அழைப்பதானது மேலும் குழப்பத்தில் முடியும். ஆதலால் அமைதியை மீண்டும் நிலை நாட்ட, உள் உலகத்துக்கு, கவனத்தை நல்ல முறையில் திருப்ப, முதல் முயற்சியானது உங்களுடைய கவனத்தை முற்றிலும் வெளி உலகத்து காட்சி களிலிருந்து நீக்கி மனதை உள்முகபார் வைக்கு கொண்டு, அமைதியின் மதிப்பை உணர்ந்தவாறு, தனித்து இருந்து பழகச் செய்வீர் களானால் இது சாத்தியமாகும். அமைதியாக இருந்து சிறிது நேரம் ஆழ்ந்து, அமர்ந்து, சிந்திக்க வேண்டும். இந்திரியங்களின் வசத்திலிருந்து சிறிது நேரம் உணர்வில் தனிப்பட்டு விலகி இருக்க பழக வேண்டும். முதலாவதாக நாளுக்கு ஐந்து பத்து நிமிடங்களாகத் தொடங்கி, தொடர்ந்து நீங்கள் வெல்லும் முயற்சியில் எடுத்து வைக்கும் முதல் படியாகும். ஈர்ப்புகளிலிருந்து விடுபட்டு இந்திரியங்களுக்கு அதிகாரியாகிச் செயல்பட இயலவில்லை என்றால் விளைவு அவை களுக்கு நாம் அடிமையாகவே ஆக நேரிடும்.

### (2) விஸ்தாரத்திலிருந்து விடுவித்துக் கொள்ளும் சக்தி (The Power of Packup)

இவ்வாறு உள் நோக்கம் கொண்ட நிலையில் இருக்கும் போது, உங்களுடைய அதிகாரத்தை மீண்டும் அடையும் முயற்சியில், அடுத்த சவால் நீங்கள் ஏற்க வேண்டிவரும். எப்பொழுதும் பல எண்ணங்களினிடையே ஓயாது உளன்று கொண்டிருக்கும் உங்கள் மனது முடிவில்லாது பல ஆராய்ச்சி களிடையே கேள்விகள் எழுப்பிக் கொண்டே யிருக்கும். புத்தி மேலும் தனது பழைய காலத்து அனுபவத்தின் ஆதாரத்தில் தோன்றும் காட்சிகளிடையே கலங்கிக் கொண்டிருக்கும் சம்ஸ்காரம் (நினைவுகள்) இவற்றின் சவால் களையும் நீங்கள் வெற்றி கொள்ள வேண்டிய

உங்கள் உணர்வில் மையமாக அமர்ந்து இருக்கிறது. இது வரை இவை உங்களிடத்தில் துரதிருஷ்டவசமாக அதிகமான சுதந்திரத்தை அனுபவம் செய்துவிட்டால் உங்களை இப்பொழுது மாறி மாறி அதிகாரம் செய்கிறது. உங்களுடைய விஸ்தாரத்திலிருந்து விடுபடும் சக்தியானது, இவ்வாறான நிலையில் உங்கள் மனம் புத்தி சம்ஸ்காரம் ஆகியவற்றை கட்டுப் பாட்டுக்கு கொண்டு வருவதற்கேயாகும். இது மூன்றையும் நிர்வகிக்கும் மற்றும் மேற்பார்வை யிடும் சக்தியாகும். இதற்காக நீங்கள் சண்டை போடத்தேவையில்லை. சண்டையானது எதிரிகளிடையே தான். மாறாக அவர்களை உங்கள் நண்பர்களாகவும், மந்திரி களாகவும் உங்கள் அமைச்சர் அவையில் முடிவுகள் எடுக்கும் முக்கிய உறுப்பினர்களாக உயர்த்த வும். மனதை சிறிதளவு ஓய்வு எடுத்துக் கொள்ளத்தூண்டி எண்ணங்களின் உற்பத்தியை குறைக்கச் சொல்லவும். உற்பத்தி யந்திரத்தை சிறிது நேரம் நிறுத்தி வைத்து அமைதியாக இருக்கச் சொல்லவும். அந்த அமைதியின் அருமையை அனுபவம் செய்யட்டும். உங்களுடன் கேள்விகளையே கேட்டுக் கொண்டிருக்கும், ஆராய்ந்து அறியும் திறமை உள்ள புத்தி ஏன்? என்று கேட்டால் அதையும் சிறிது பொறுமையாகவும், அமைதியாகவும் இருக்க முயலச் சொல்லவும், அப்பொழுது தான் தெரிந்து கொள்ள விரும்பும் கேள்வி களுக்கு சிறிது பொறுமையுடன் நின்று கவனித்தால் தான் சரியான விடை கிடைக்கும் என கூறவும். புத்தியை சிறிது வேகத்தை தளர்த்தி நின்று வெளிப்படும் நாடக காட்சியை காணச் சொல்லவும்.

தொடர் வண்டிபோல் ஓடிக் கொண்டி ருக்கும் எண்ணங்கள் உங்கள் அமைதி நிலையை கலைக்க வந்தால் கவலைப்படாமல் அவை வந்த வழியே செல்ல விடவும். ஆனால் நீங்களும் அவற்றை ஏற்றுக் கொள்ளாதீர்கள். இதனால் அவை வருவதன் வேகம் குறைந்து வருவதுடன் அவை வருவதும் குறைந்துக் கொண்டே போகும் இவ்வாறு உங்கள் விழிப்புணர்வுகளின் துணை யாளர்களான மனம், புத்தி சம்ஸ்காரங்களை தன் அதிகாரத்திற்கு திரும்பி வர வழைத்த பின் உங்களுடைய அரியாசனத்தில் முழு சுய மரியாதையுடன் உள் ஒன்றிணைந்த திருப்தி யுடன் நீங்கள் அமரலாம். இப்பொழுது நீங்கள் முழுமையாக தயாராகி விட்டீர்கள். ஆரம்பத்தில் சிறிதாகத் தொடங்கி நாளடைவில் உங்கள் அதிகாரத்தை அதிகரித்துக் கொண்டு செல்லுங் கள். மறக்க வேண்டாம். நாம் கொடுங்கோல் ஆட்சி செலுத்த விரும்புபவரல்ல. உண்மை யான அதிகாரமானது ஒருவர் தலைமை தாங்கும் திறமையில் உள்ளது. உங்கள் மனதுக்கு சேவை செய்யுங்கள். புத்தியை அன்புடன் கவனித்து நடத்திச் செல்லவும். அதன் அனுபவங்களுக்கு மரியாதையும், மதிப்பும் கொடுத்துச் செல்லுங்கள். ஏனென்றால் அவை நமக்கு ஆசிரியர்களும் ஆவர். நாம் கொடுக்கும் சேவைக்கு பல மடங்கு பலனை திரும்பக் கொடுக்கக்கூடியவர்களும் ஆவர்.

**(3) உள், மற்றும் வெளியுலக நிகழ்ச்சிகள், செயல்கள் ஆகியவை களால் பாதிக்கப் படாமல் ஆக்கப் பூர்வமான விதத்தில் நம்மை எடுத்துச் செல்லும் சகிப்புத் தன்மை (The Power of Tolerate)**

குழப்பங்களால் எந்தவிதமான பலன் அல்லது நன்மை விளையாது. ஒருவர் உலகத்தில் குழப்பம் உண்டாக்கினால் அதனால் விளையும் பாதிப்புகள் அவரும், மற்றவரும் கூட அனுபவிக்க வேண்டிவரும். இந்த பாதிப்பு மனநிலைகளிலும் மற்றும் உணர்ச்சிகளாகவும் வெளிப்படலாம். இவற்றால் சிறிதும் பாதிக்கப்படாமல் இருக்க சகிப்புத்தன்மை எனும் சக்தி மிக அவசியமானதாக தேவைப் படுகிறது. உங்களுடைய மன சிம்மாசனத்தில் அமர்ந்து

சாட்சியாகக் காணும்போது இந்த சக்தியை நடைமுறையில் அனுபவம் செய்யலாம். அவ்வாறு காணும் நிகழ்ச்சிகள், காட்சிகள் ஆகியவற்றில் நீங்களும் கலந்திருக் கிறீர்கள். ஆனால் பாதிக்காமல், அதே நேரத்தில் பொறுமையாக விடுபட்டும் இருக்கின்றீர்கள். இது நாம் இயல்பாக பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையாகும்.

ஒரு காரியத்தில் பலருடன் நீங்கள் தீவிர மாக பங்கு கொண்டு இருக்கின்றீர்கள். அந்த நேரங்களில் உங்களைச் சுற்றி உள்ளவர் ஏதாவது எதிர்மாறான சொற்கள் அல்லது வார்த்தைகள் கூறிவிடுகிறார்கள். அவ்வார்த் தைகள் இதுவரை உங்களில் மறைந்து இருந்த பல பழைய நினைவுகள், உணர்ச்சிகளை எழுப்பி விடுகின்றது. இதில் முதலில் உங்களின் எழும்பும் மற்றும் எழும்பக்கூடிய மறுப்புகளை நீங்கள் தாங்க வேண்டியிருக்கும். இதற்காக அதைச் சார்ந்த உங்கள் எண்ணங்கள் விருப்பங்கள் ஆகியவற்றிலிருந்து உணர்ந்த நிலையில் விடுபட்டு செயல்பட்டால்தான் சாத்தியமாகும். ஒன்று நினைவு கொள்ள வேண்டும். நம்முடைய எண்ணங்கள், உணர்வுகள் நம்முடையதல்ல. அவை நம்முடைய படைப்பேயாகும். படைத்தவன் தன்னுடைய படைப்பினால் பாதிப்பு அடையக் கூடாது. நீங்கள் மற்றவரை சகித்துக் கொள்ள வேண்டிவரும் பொழுது நினைவு கொள்ளுங் கள், நடப்பது ஒரு முடிவில்லாது நிகழ்ந்துக் கொண்டிருக்கும் நாடகமாகும். இந்த நாடக சரித்திரத்தில் உள்ள எத்தகைய நிகழ்ச்சியும் உங்களை குழப்பம் அடையச் செய்யக்கூடாது. உண்மையில் உங்கள் பாத்திரமானது மிக முக்கியமானது ஆகும். உங்களுடைய உள்ளே எழும்பும் மறுப்புகளைப் பொறுத்து மாற்றிக் கொள்வதுடன், மற்றவருடைய மறுப்புகளையும் செயல் களையும் சகித்துக் கொண்டு அவர்களுடைய ஆற்றலையும் ஏற்று, காரியத்தின் நலன் கருத்தில் கொண்டு உங்கள் ஒத்துழைப்பாக மேலும் சிறப்பான தகுதி கொண்ட ஆற்றலை, வெளிப்படுத்திக் காட்டுங்கள். அவமதிப்புக் கொடுப்பவருக்கு அவர் நலனையே கருதி, ஆசீகள் கொடுத்து, அவர் உங்களை மறுக்கும் பாவனைக்கு விடையாக அவரையும் ஏற்றுக் கொண்டு வெறுப்புக்கு மாறாக அன்பை வெளிப்படுத்தி நடந்து கொள்ள வேண்டும். அதிகாரி ஆத்மாக்கள் மற்றவரையும் மாற்றக்கூடிய வல்லமைகொண்டவராவர்.

### 4. மற்றவருக்கும் மதிப்புக் கொடுத்து அவருடைய எண்ணங்கள், விருப்பங்கள் ஆகியவற்றையும் பரந்த மனப்பான்மை கொண்டு ஏற்றுக் கொள்ளும் திறன் (The Power of Accommodation)

ஒருவரை விரும்பினால் நாம் ஏற்றுக் கொள்கிறோம் இல்லை என்றால் விலக்கி விடுகிறோம். மற்றவர்களையும் அங்கீகரிப்பது நாம் அவரை நம் உலகத்தில் அழைத்துக் கொள்கிறோம். அதைப்போல் நம்மை வரவேற்று ஏற்றுக் கொள்பவரை, நாம் விரும்பித் தேடுகிறோம். இன்றைய உலகில் ஒருவரை மற்றவர் ஏற்றுக் கொள்வது என்பது மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. இதில் மற்றவரை ஏற்றுக் கொள்வது என்பதில் அவருடைய சிந்தனைகள், வழிகள் ஆகியவற்றுக்கும் நம்மில் இடம் கொடுப்பது அடங்கி உள்ளது. இதில் சில நேரங்களில் அவர்கள் உங்களை அவமதிக் கலாம். மீறி எதிர்க்கலாம். அதற்கும் நீங்கள் இன்னிலையில் அனுமதி கொடுக்கிறீர்கள். ஆதலால் ஏற்றுக் கொள்வது என்ற திறனில் ஒருவிதமான பயமற்ற நிலையும் அடங்கி இருக்கிறது. நீங்கள் எந்த நிலையிலும் என்னை புண்படுத்த இயலாது என்ற உறுதி வெளிப்படு கிறது. இந்த நிச்சயத்தில் நிகழ்ச்சிகள், அவைகளுடைய உண்மையான உருவில் வெளிப்படும் வரை மற்றவர்கள் உங்கள் மீது தங்களுடைய அதிகாரத்தை திணித்தாலும்

உங்களுடைய தீர்மானம் மற்றும் நிலையானது சரியான முறையில் உருவமைக்கப்பட்டு இருக்கும். இதில் உங்களுடைய ஏற்றுத் தாங்கிக் கொள்ளும் சக்தியானது எந்த எதிர் வினையையும் வெளிப்படுத்தாமல் இருக்கிறதா? என்பதில் அந்த திறன் வெளிப்படுகிறது.

**5. நம்முடைய, மற்றவருடைய நடவடிக்கைகள், முடிவுகள், தீர்வுகள் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றின் தரத்தை தீர்மானிக்கும் திறன் (The Power of Judgement)**

எந்த விதமான சூழ்நிலைகளையும் மற்றும் மனிதர்களையும் பொறுத்துக் கொள்ளும் மற்றும் ஏற்று கொள்ளும் சக்திகளை உள்மன அரியாசனத்தில் அமர்ந்து உங்களில் வளர்த்து, விரிவு படுத்திக்கொள்ளும் திறமைகள் கண்டு அறிந்த பின் இப்பொழுது நீங்கள் தீர்மானங்கள் எடுக்க தயாராகிறீர்கள். இது மற்றவர்களின் மீது எடுக்கும் தீர்மானங்கள் அல்ல.

உண்மையான, ஐயமில்லாத, நம்பக்கூடிய சரியான தீர்மானம் மூன்று பரிமாணங்கள் கொண்டது. ஒன்று, சூழ்நிலையைப்பற்றி தீர்மானித்தல் அல்லது மதிப்பிடுதல், அதன் அடிப்படையில் சரியான பதிலை தெரியப் படுத்துவது அல்லது உண்டாக்குவது. மற்றது மக்களைப் பற்றி நீங்கள் தீர்மானம் செய்வதில்லை ஆனால் அவர்களின் செய்கை களை ஆராய்ந்து தீர்மானிக்கிறீர்கள். அவர்கள் வெளிப்படுத்தும் காரியங்களின் ஆதாரத்தில் அதன் தரம், அதில் அடங்கியுள்ள நியாயம், நெறிமுறை அல்லது அதன் தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இருக்கும். ஏனெனில் நாம் என்றும் மாணவர்களாவர். மற்றவரிடத்திலிருந்து கற்றறிய ஆவல் கொண்டு இருக்கிறோம். தனிப்பட்ட முறையில் எந்த தனி மனிதனையும் நாம் தீர்மானிக்கத் தேவையில்லை. ஏனென்றால் அவர்கள் செயலானது மாறுபட்ட நிலையில் வெளிப் பட்டாலும், எல்லோரும் இயல்பாக நல்லவரே ஆவர்.

நம்மீது நாம் தீர்மானம் செய்துக் கொள்வது எவ்வாறு? இதன் பொருள் நம் மீது நாம் தண்டனை கொடுத்துக் கொள்வது அல்ல. நம்முடைய எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள், சீரான, உறுதியான உயர்ந்த கோட்பாடுகள் கொண்டனவாய், அவற்றை மற்றவரும் விரும்பி வரவேற்கக்கூடியனவாக இருக்கின்றனவா? என்பதேயாகும்.

இவை எல்லாம் எப்பொழுது சாத்திய மாகும்? விஸ்தாரத்தில் செல்லாமல், வீணான சிந்தனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து சாட்சியாக, விலகிய தனிப்பட்ட நிலையில் மற்றும் வெளிப்படக்கூடிய எதிர்மறை சிந்தனைகளை பொறுத்துக் கொள்ளக்கூடிய வராய், மற்றவருடைய விருப்பங்களையும், கருத்துக்களையும் ஏற்று, அவர்களையும் உடன் அழைத்துச் செல்பவராய் இருக்கும் போது சாத்தியம் ஆகும்.

## ஆன்மீக ஆரோக்கியம்

*கடும் நோயின் காரணமாக, அறுவை சிசிக்சை செய்ய வேண்டியிருந்தால், வலி தெரியாமலிருக்க ஊசி போடுவார்கள். அல்லது மாத்திரைகள் விழுங்க வேண்டியதிருக்கும் பல நாட்களுக்கு விரும்புகிற உணவும் சாப்பிட முடியாது. இதுபோலவே, நமக்கு பல பிறவிகளாக பஞ்ச விகாரங்களால் உண்டாகியிருக்கும் நோய், அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலைக்கு முற்றி விட்டது. நோய் குணமடைய ஆன்மீகப் பத்தியம் அனுசரித்து வர வேண்டும் நோயின் வலியிலிருந்து விடுபட அவ்வப்போது அசரீரி அனுபவம் என்ற ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.*




**மறைமலைநகர்:** சிவராத்திரி விழாவில் சிறப்பு சொற்பொழிவாற்றுபவர் பி.கு. கலாவதிஜி, இயக்குநர், பிரம்மா குமாரிகள் ரிட்ரீட் சென்டர், பொடவூர் மற்றும் பி.கு. சீனிவாசன்



**தர்மபுரி:** 76வது மகா சிவராத்திரி சோமநாத் ஜோதிர்லிங்க தரிசன நிகழ்ச்சியில் திரு. பவுன்ராஜ், திருமதி திலகவதி பவுன்ராஜ், திருமதி முத்துலக்ஷ்மி, உடன் பி.கு. ஸ்ரீராதம்மா மற்றும் பி.கு. பாக்யா



**கோட்டயம்:** இராஜயோகா நிலைய பொறுப்பு சகோதரி பி.கு. பங்கஜம் அவர்களின் ஆன்மீகப் பணிக்காக ரோட்டரி கிளப் சார்பாக கேரள சட்ட சபை துணை சபாநாயகர் திரு. ஷக்தன் அவர்கள் கௌரவிக்கின்றார்.




**கடலூர்:** மதநல்லிணக்க விழாவில் பி.கு. கவிதா, புதுச்சேரி உரையாற்றுகின்றார். மேடையில் சகோதரி அற்புதமேரி, செயின்ட் ஜோஸப் ஹையர் செகண்டரி ஸ்கூல் முதல்வர் மத தலைவர்களுடன்



**பரமக்குடி:** சிவஜெயந்தி விழாவில் குத்துவிளக்கேற்றுபவர்கள் பி.கு. உமா, திருமதி M. கீர்த்திகா, திரு. ஜெய்சங்கர், திரு. முனியசாமி, திரு. கட்டியப்பா குருக்கள் மற்றும் விருந்தினர்கள்



**பரமக்குடி:** 76-வது சிவஜெயந்தி விழாவில் பங்குபெற்ற 76 தம்பதியினர்.



**சென்னை (ஹேப்பி வில்லேஜ்):** PG Value Education பயிற்சியில் பயிலும் சகோதர சகோதரிகளுடன் பயிற்சி ஆசிரியர்கள்.



**சென்னை:** ONGC அலுவலக அதிகாரிகளுக்கு தியானப் பயிற்சி அளிக்கின்றார் பி.கு. நீலிமா



**திருத்தணி:** சிவபாபாவின் கொடியேற்றும் போது பி.கு. பீனா, மற்றும் பிரம்மா குமார் சகோதர சகோதரிகள்



**திருத்தணி:** சிவஜெயந்தி விழாவில் குத்துவிளக்கேற்றுபவர்கள்: பி.கு. பீனா, மண்டல சேவை ஒருங்கிணைப்பாளர், பி.கு. சுமித்ரா, பி.கு. சுசீலா மாதா, மற்றும் பி.கு. சாய்ராம்.



**புதுக்கோட்டை:** மாவட்ட ஆட்சியர் திருமதி B. மகேஸ்வரி அவர்களுக்கு இறை நினைவு பரிசினை வழங்குபவர் பி.கு. பாலாஜி



**சத்யமங்கலம்:** புதிய கீதாபாடசாலை திறப்பு விழாவில் முன்நிலை நகர் மன்றத் தலைவர் திரு. ஓம். எம். சுப்பிரமணியம் அவர்களுக்கு இறை நினைவு பரிசு வழங்குபவர் பி.கு. அனுசூயா, ஈரோடு, உடன் பி.கு. ஆனந்த கிருஷ்ணன்






**மேட்டூர் அணை:** ஓப்ளிசெட்டி பங்களாவில் பிரமுகர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பி.கு. உமா (திருவண்ணாமலை) அவர்கள் உரையாற்ற பங்கு பெற்றவர்கள் திரு. மோகன் ஓப்ளி செட்டி அவர்களின் குமாரர் மற்றும் பிரமுகர்கள்




**சென்னை (முகப்பேர்):** கட்டிட துறை சார்ந்தவர்களுக்கான நிகழ்ச்சியில் திரு. இராஜபாண்டியன், திரு. பரமசிவம் மற்றும் சகோதரி பி.கு. தேவகி



**கயத்தாறு:** சிவ ஜெயந்தி விழாவை முன்னிட்டு சிவன் கோவிலில் நடைபெற்ற தீப தியானத்தில் கலந்து கொண்ட கன்னியர்கள், திரு. செந்தில்மாறன், காவல்துறை ஆய்வாளர், பி.கு. செல்வி (கோவில் பட்டி)



**மேட்டூர் அணை:** அனல் மின்நிலைய முக்கிய அலுவர்களுடன் பி.கு. உமா, பி.கு. தேன்மொழி மற்றும் முதன்மை பொறியாளர் திரு. மாது அவர்கள்.



**பவானிசாகர்:** 29.1.2012 அன்று விஜயம் செய்த பி.கு. சர்மாஜி அவர்களுடன் பி.கு. தேவராஜ், பி.கு. செல்வராஜ், பி.கு. கணேஷ்







**நெய்வேலி:** சிவஜெயந்தி விழாவில் (இ.வ.) சிவசிதம்பர கந்தசாமி சிவாச்சாரியார், பி.கு. உமா (திருவண்ணாமலை), அருட்திரு. R. இரட்சகர், திரு. மௌல்வி K.S.M. முகமது ரபீக் இமாம் ஆகியோர் மற்றும் பங்கு பெற்றோர்



**காஞ்சிபுரம்:** அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களால் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களை பிரம்மா குமாரிகளின் காஞ்சிபுரம் கிளைநிலையம் கௌரவித்தது. மேடையில் பி.கு. பாண்டியன், பி.கு. அகிலா



**திருத்தணி:** காய், கனி மார்க்கெட்டில் பாபா செய்தி அளிப்பவர் பி.கு. சுசீலா அவர்கள்



**விருத்தாச்சலம்:** சிவஜெயந்தி விழாவினை முன்னிட்டு சிவபாபா கொடியேற்றுபவர்கள்: T.D, செம்மல் (கூடுதல் சார்பு நீதிபதி, விருத்தாசலம், உடன் பி.கு. சீதா



**நாகர்கோவில்:** உலக அமைதி தியானத்தில் நாகர்கோவில் நகராட்சி தலைவி திருமதி மீனாதேவ் மற்றும் NSK Polytechnic முதல்வர் திரு. சிவா உரையாற்றுபவர் பி.கு.கோகிலா





**சென்னை:** சென்னைக்கு விஜயம் செய்த பி.கு. ஆஷாஜி அவர்கள் பிரம்மா குமார் பிரம்மா குமாரிகளுக்கு சிறப்பு வகுப்பு நடத்துகின்றார், உடன் பி.கு. இரத்தன் தாதா, மற்றும் அவர்கள் துணைவியார், பி.கு. வித்யா, பி.கு. கௌசல்யா மற்றும் நிகழ்ச்சியில் பங்குபெற்றோர்



**சென்னை:** தமிழக மண்டல முன்னாள் இயக்குநர் சகோதரி சிவகன்யா அவர்களின் 8ம் ஆண்டு நினைவு தினத்தில் மூத்த சகோதரிகள் சிரத்தாஞ்சலி செலுத்துகிறார்கள்.



**சாத்தூர்:** சிவஜெயந்தி விழாவில் குத்துவிளக்கேற்றும் விருந்தினர்கள்: திரு. D.S. ஜெயசந்திரன், மாவட்ட லயன்ஸ் கிளப் சேர்மன், திருமதி A. சுபத்ரா, மேஜிஸ்டிரேட், பி.கு. செல்வி, கோவில்பட்டி மற்றும் பிரம்மா குமாரி சகோதரிகள்




**திருச்சி:** பவளவிழாவில் மாணவர்களுக்காக நடத்தப் பட்ட போட்டியில் வென்றவர்களுக்கு பரிசு வழங்குபவர் பி.கு. ஆஷாஜி




**திருச்சி:** பவளவிழாவில் கலை நிகழ்ச்சிகளை அளித்த கலைமாமணி திருமதி ரேவதி முத்துச்சாமி குழுவினர்.



**திருச்சி:** பவளவிழாவில் இளைஞர்களுக்கான நிகழ்ச்சியில் கலை நிகழ்ச்சிகளை அளித்த சிறுமிகள்.

# EXL úTÔûR J¯l× Sôs- úU 31

பி.கு. சுவாதி, சென்னை.



இந்தியாவில் 2010-ன் கணக்கெடுப்பு படி 35 கோடி மக்கள் விதவிதமான போதை பொருட்களுக்கு அடிமையாகி இருக்கிறார்கள். 5,500 குழந்தைகள் அனுதினமும் போதை பொருட்களை பயன்படுத்த கற்றுக் கொள்கிறார் கள். ஒவ்வொரு வருடமும் 1000 கோடி ரூபாய் போதைப் பொருட்களின் மீது செலவு செய்யப்படுகிறது. போதை தரும் பதார்த்தங் களில் மிகக் குறிப்பாக மதுபானம் குடும்பத்தை யும், சமுதாயத்தையும் நிலைகுலைய செய்வதில் முதன்மையான இடத்தை பிடித்துள்ளது, இதற்கு அடுத்தப் படியாக குட்கா எனப்படும் போதை வஸ்து கடந்த 20 ஆண்டுகளிலேயே தனது சர்வ வியாபகத்தன்மையை நிரூபித்து விட்டது என்று கூறலாம்.

சமுதாயத்தின் சண்டை, சச்சரவு, மேலும் எத்தனையோ சமூக விரோத செயல்கள் இவை அனைத்திலும் போதை பொருள் உபயோகம் அவசியம் இடம் பெற்றுள்ளது. போதை பொருட்கள் மனிதனை, மனித நிலையிலிருந்து கீழே கொண்டுவரச் செய்து தாழ்ந்த நிலையை ஏற்படுத்த செய்துவிடும் சக்தியாக விளங்குகிறது. மதுபானம் அருந்துபவர்களிடம் நிச்சயமாக அசைவ உணவு உட்கொள்ளும் பழக்கமும் இருக்கும், இதன் காரணமாக அவர்களிடம் தாமசீக உள்ளுணர்வும் அதிகமாக இருக்கும். இவை மட்டுமல்லாது பண்பு நலன்களை கடைப்பிடிப்பது என்பது ஆகாயத்தில் கட்டப்பட்ட மாளிகை போன்றதாகத்தான் அவர்களிடம் தோன்றும், இதன் உட்பொருள் யாதென்றால் மகாபாவியாக இருப்பவர்களிடம் சத்தியத்தை கடைப் பிடித்தல் எங்கிருந்து வர இயலும், மாமிசத்தை உண்பவர்களிடம் இரக்கம் எங்கிருந்து வர முடியும். தீய உணர்வு உள்ளவரிடம் கல்வியும், செல்வமும் அதனோடு சேர்ந்து சுகமும் எங்கிருந்து வரமுடியும். ஒரு புறம் மதுபானங் களினால் மேலும் தொடர்புடைய போதை பொருட்களினால் சமுதாய சீர்கேடு அதிகரிக் கிறது என்பதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கும் போதும் ஒவ்வொரு வருடமும் சுமார் 60 ஆயிரம் கோடி அரசுக்கு வருமானம் வருவதை மறுக்க இயலவில்லை, ஆனால் போதை பொருட்களை உட்கொள்வதால் ஏற்படும் நோய்களுக்காக 150 ஆயிரம் கோடி பணம் செலவு செய்ய வேண்டியும் இருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. ஆயிரக்கணக் கான குழந்தைகள் அனாதையாக இதனால் ஆகிவிடுகிறார்கள். பல ஆயிரம் தம்பதியினர் இத்தீய பழக்கத்தினால் வலுக் கட்டாயமாக மனமுறிவு செய்து கொள்கிறார்கள். இது மட்டுமல்லாது நாள் தோறும் ஏற்படும் பல்வேறு துயர சம்பவங்களும் கூட மதுபானம் அருந்துவதினால் ஏற்பட்டுக் கொண்டே தான் இருக்கின்றது. மது அருந்துபவர்களிடம் தவறான சொற்கள் பயன்படுத்துதல், சுய நினைவு அற்ற நிலையில் பூமியில் விழுந்து புரள்வது, திருடுதல் போன்ற அனைத்து பழக்கங்களும் தென்படுகிறது.

இந்திய அரசுக்கு புகையிலையினால் 600 கோடி ரூபாய் ஒவ்வொருவருடமும் வருமானம் கிடைக்கின்றது என்றாலும் கூட இந்த அரசு ஒவ்வொரு ஆண்டும் 2400 கோடி ரூபாய் புகையினால் ஏற்படும் நோய்களுக்காக செலவு செய்ய வேண்டியும் உள்ளது. சற்று தெளிவாக பட்டியலிட்டால் நமக்கு தெரிய வருவது என்னவென்றால் போதை பொருட்களுக்கு அடிமையாகி இருப்பவர்களில் பொறுப்பு மிக்க

பதவியிலிருப்பவர்களும் உண்டு எனும் செய்தி வருத்தமளிப்பதாக உள்ளது.

ஒரு சமூக சேவகர் தன்னுடைய முழு ஆயுள் காலத்தில் 1000 மனிதனை அதாவது போதை வஸ்துக்கு அடிமையாகி இருப்பவர் களை விடுவித்து மறுவாழ்வு தர இயலாமல் போகலாம். ஆனால் அவர் விரும்பினால் 1000 சின்னஞ்சிறிய குழந்தைகளின் மனதில் ஒரே நாளில் போதைக்கு அடிமையாகாமல் இருக்கும் அல்லது அதன் மீது வெறுப்பை உருவாக்கு வதற்கான விதையை விதைத்துவிட முடியும். பள்ளிக்கு செல்லும் சின்னஞ்சிறு குழந்தை களிடம் காலை பிரார்த்தனை நேரத்தில் கதைகள் வாயிலாகவும், உதாரணங்கள் மேலும் வழிகாட்டும் சித்திரங்கள் மூலமாகவும் கூட அதன் விளைவுகளைப்பற்றி எடுத்துரைக்க முடியும். ஏனென்றால நாம் நோய்வாய்ப்பட்ட பின்பு மருந்து எடுத்துக்கொள்வதைவிட வரும் முன் காப்போம் திட்டத்தை கடைப்பிடித்தால் நோயே வராமல் தடுக்க முடியும். புகை வண்டி, பேருந்து மேலும் கூட்டம் கூடும் இடங்களில் யார் புகையிலை போன்றவைகளை பயன்படுத்துகிறார்கள் அவர்களிடம் கடுமையான எச்சரிக்கை வார்த்தையுடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றாலும் அதனை அவசியம் செய்ய வேண்டும். ஏனென்றால் பாரத நாட்டில் 200 பேர் புகை பிடிப்பவர்களின் அருகில் அமர்வதினாலேயே தினமும் இறந்து கொண்டு இருக்கின்றார்கள். மேலும் புகை பிடிப்பவர்கள் அதன் துகள்களை 84% பிறர் அவர்கள் அறியாமலேயே உட்கொள்ள செய்து விடுகின்றார்கள். ஆகவே பலவிதங்களில் பாதிப்பை ஏற்படவல்ல போதை வஸ்துக்களை பயன்படுத்துவதிலிருந்து விடுவித்து வெற்றி அடைய கீழே சிறந்த ஆலோசனைகள் சிலவற்றை குறிப்பிடப்படுகிறது.

1) யார் இளம் பிராயத்தில் தூர்குணங்களிலி ருந்து பாதுகாப்பாக இருப்பார்களோ அவர்களே மகானாக இருக்கிறார்கள்.

2) யார் போதை வஸ்துக்களை உட்கொள்வதில் விருப்பம் கொண்டிருக் கிறார்கள் அவர்கள் விரைவில் சவமாக ஆக நேரிடுகிறது.

3) காகம் மேலும் நாய் மாமிச பட்சணம் மற்றும் அனைத்து ஆகாரங்களையும் உண்ணும் இனமாக இருப்பினும் கூட போதை வஸ்துக்களில் பயன்படுத்தப்பட்டதை குப்பை தொட்டில் வீசியதை உண்பதில்லை.

4) போதைக்கு அடிமையாகியிருப்பவர் களுக்கு அதனை விடுவது கடினமாகும். அவர்களால் விடுபட்டு வருவது சுலபமில்லாத தாக இருப்பினும் கூட யார் போதை வஸ்துக்கு அடிமையாகாதவர்கள் அவர்களின் மனதில் போதைப் பொருட்களின் மீது வெறுப்பின் விதையை விதைப்பது சுலபமாகும்.

5) போதை வஸ்துக்களால் எவ்வளவு உடல் நிலைக்கு கேடு விளைகின்றது என்பது பற்றிய விழிப்புணர்வு சற்று குறைவாகவே தான் உள்ளது. ஒருவேளை வழிப்புணர்வு இருக்குமானால், உட்கொள்வதிலிருந்து தூரமாகவும், அதனை தொடவும் மாட்டார்கள்.

6) யார் மகிழ்ச்சி என்ற குணத்தை கொடுக்க வல்லவர், துக்கத்தை போக்க வல்லவர், தவறு புரியும் போது அதனை திருத்துபவர் மேலும் வெற்றி தரும் கனவு களால் அதாவது நற்பண்புகளை சாத்தியமாக்கு பவராக உள்ளோரின் உண்மையான நட்பு கொள்ள வேண்டியது அவசியமாகும். மது அருந்துபவர்களின் நட்பு கொள்வதால் தவறான சேர்க்கையின் பலனாக தானும் தீயவற்றிற்கு அடிமையாகி விடுகிறார்கள்.

7) எவ்வாறு மனிதனால் உருவாக்கப்பட்ட அகர்பத்தி கோவிலில் உள்ள மூர்த்தியை

சுகந்தம் அடையச் செய்கிறது. அவ்வாறு ஆத்மாவாகிய மூர்த்தி இருக்கும் கோவில் (மனித உடல்) போதை வஸ்துக்களால் அசுத்தப்படுத்தப்படலாமா என்ன?

8) ஒரு வேளை பாடம் புகட்டும் ஆசிரியரே (புத்திமான், சமூக சேவகர்) போதைப் பொருட்களை பயன்படுத்துவார்கள் எனில் அவர்கள் ஆற்றும் அரும்பணி தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் துர்குணத்தினால் நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

9) போதை பொருட்களை உட்கொள்ளா தவர்களிலிருந்து 5% பேர் குழுவாக ஒன்று சேர்ந்து விட்டால் கூட சமுதாயத்தில் உள்ள இந்த பழக்கத்தை களைந்து விட முடியும்.

10) அடிமையாகுதல் என்பது முதலில் வேலைக்காரன் போலாகி விடுகிறது, பின்பு தோழனாகி விடுகிறது, ஒரு சமயத்திற்கு மேல் அது எஜமானனாகவும் ஆகி அடிமைபோல செய்து விடும்.

11) முதலில் நாம் போதை வஸ்துக்களை உட்கொள்கிறோம், பின்னால் போதை வஸ்து நம்மை உட்கொள்ள ஆரம்பித்துவிடும்.

12) அனைத்தையும் விட எளிதாக கிடைக்கக்கூடிய பொருள் போதை வஸ்து தான். எனவே இதிலிருந்து மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்..

13) எவ்வாறு கொலை செய்ய முயற்சிப்பது என்பது சட்டம் 309ன் படி குற்றமாகும். அவ்வாறாகத் தான் போதை பொருட்கள் உட்கொள்வதும் கூட குற்றமாகும்.

14) திருமண அழைப்பில் கூட போதை வஸ்துக்களை உட்கொள்பவர்களுக்கு அனுமதி இல்லை அல்லது சுப நிகழ்ச்சியல் கலந்து கொள்ள தடை - இது போன்ற வாசகங்களை எழுத வேண்டியது அவசியமாகும்.

## போதை பொருட்களை உட்கொள்வதை தவிர்க்க சில ஆலோசனைகள்:

1) தீர்மானமான எண்ணத்தின் அடிப் படையில் எந்த ஒரு தீய பழக்கங் களையும் விட்டுவிட முடியும்.

2) சிறந்த வழிகாட்டும் புத்தகங்களை படிக்க வேண்டும் ஏனென்றால் காலியான மனம் சைத்தானின் இல்லமாக இருக்கிறது.

3) பஞ்சாயத்து தலைவர்கள் அல்லது உறுப்பினர்கள் வாயிலாகக்கூட மது அருந்துதல் மேலும் பிற போதை வஸ்துக் களை உட்கொள்வதை தடை செய்ய முயற்சி மேற்கொள்ளலாம்.

5) புகைபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும்போது இரண்டு லவங்கத்தை வாயில் போட்டு மெதுவாக சுவைப்பது மிகவும் பயன் தரும்.

இவ்வாறு வெளிப்படையான பலனை அடைய சில கட்டுப்பாடுகளை மேற்கொண்டா லும் கூட மன உறுதியுடன் போதை பொருட்கள், புகைப்பிடித்தல் ஆகியவற்றிலி ருந்து விடுபட்டு பாதுகாப்பாக இருக்க ஆன்மீக சக்தியும் அவசியமாகிறது. எனவே இராஜயோகம் எனப்படும் தியானத்தை பயிற்சி செய்யும் சகோதர சகோதரிகள் போதைக்கு அடிமையாவதிலிருந்து தங்களை விடுத்து விட்டார்கள். இதற்கான காரணம் இராஜயோகம் ஆகும். இராஜயோகம் எனில் ஆத்மாவின் தொடர்பு பரமாத்மா இறைவனுடன் கொள்வதாகும். இது மிகவும் சுலபமான எளிய பயிற்சியாகும். இதனை யார் வேண்டுமானாலும் மேற்கொள்ள முடியும் ஆகவே உங்களுக்கு அருகாமையில் உள்ள பிரம்மாகுமாரிகள் இராஜயோக தியான நிலையத்தில் கற்பிக்கப் படும் இலவச இராஜயோக பயிற்சியை செய்து ஆரோக்கியமான வாழ்வு வாழ வாழ்த்துக்கள்!!

## சுயத்தை புதுப்பிப்பதற்காக நேரத்தை ஒதுக்குங்கள்

மனிதர்கள் தங்களுடைய நண்பர்கள், உறவுகள், உடன் பணி புரிபவருக்காகவும் மற்றவருக்காகவும் நேரம் கொடுக்கின்றனர். ஆனால் அவர்கள் தன்னுடைய சுயத்தை சிந்திப்பதற் காக நேரம் கொடுப்பதில்லை ஒருவர் தன்னுடன் ஒரு நேரத்தை ஒப்பந்தம் செய்து தன்னுடைய சொந்த உணர்வுகளை, சாதனைகளை புரிந்து கொண்டு மேலும் சுயத்தை மதிப்பீடு செய்வதற்காகவும் ஒதுக்க வேண்டும். எப்போது ஒருவர் தன்னுடன் அமருவாரோ அப்போது அவரால் தன்னுடைய தடைகள், வாய்ப்புகள் மேலும் சோதனைகள், குறிக்கோள்கள் மேலும் பலவற்றைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும். ஒருவர் அவசியம் தனக்காக கொஞ்ச சமயம் கொடுத்து புதுப்பிக்க மேலும் புத்துணர்ச்சி அடைய வேண்டும். இரண்டு நபர்கள் பட்டுப்போன மரங்களை வெட்டுவதற்காக காட்டிற்கு அனுப்பப்பட்டனர். ஒரு நபரால் மாலை பொழுதிற்குள் 10 மரங்களை வெட்ட முடிந்தது. மற்றவரால் இரண்டு மரங்களை மட்டுமே வெட்ட முடிந்தது. எப்படி இன்னொரு நபர் 10 மரங்களை வெட்டினார் என்பதன் காரணத்தை புரிந்து கொள்ளவே முடிய வில்லை. ஆகையால் 10 மரங்களை வெட்டிய நபரை சந்தித்து ஆலோசனை தரும்படி கேட்டுக் கொண்டார். அப்போது அவர் கூறினார் ஒவ்வொரு மரத்தை வெட்டிய பிறகும் கத்தியை தீட்டிக் கொள்ள வேண்டும் என்றார். அதுபோலவே ஒருவர் அவசியம் சுயத்தை புதுப்பிப்பதற்காக நேரத்தை ஒதுக்க வேண்டும். அவர் தன்னுடைய உயர்ந்ததன்மை பலம் மேலும் ஆசீர்வாதங்கள் பற்றி விழிப்புணர்வோடு இருந்து மேலும் சுயச்சிந்தனை பயிற்சி செய்ய வேண்டும். ஒருவர் அவசியம் தியானப் பயிற்சி செய்ய வேண்டும். மற்றவர்களின் கஷ்டங்களை தெரிந்து கொள்ள நேரத்தை செலவழித்தால், அப்போது அவரிடம் உள்ள சில கடினங்கள் மறைந்து விடுகின்றது. ஒருவர் அவசியம் தன்னுடைய வாழ்க்கையில் மாணவனாக இருக்க வேண்டும். அவர் அவசியம் கொஞ்ச நேரம் கொடுத்து சில நல்ல புத்தகங்களை படிக்க வேண்டும், அப்போது தன் அறிவை அதிகரிக்க முடியும்.



## நீங்கள் சாதாரணமானவரல்ல

**நீங்கள் எவ்வளவு முக்கியமானவர் என்பதைப் பற்றி எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? இன்றைக்கு என்னால் ஆக வேண்டிய காரியங்கள் எத்தனையோ எனக்காகவே காத்திருக்கின்றன என்று எண்ணியதுண்டா? இந்த உலகம் ஒரு எளிய நாடக மேடை. இதில் ஒவ்வொருவரும் அவரவர் பாத்திரத்தில் நடித்துக் கொண்டிருக்கிறோம் என்பதாக உணரும்பொழுது பொறாமைக்கு இடமில்லை. சாதாரண நாடக மேடையில், ஒருவர் மற்றவரது பாத்திரத்தை நடிக்க முடியும். ஆனால் உலக நாடகத்தில் இது சாத்தியமில்லை. இதில் பாத்திரம் எதுவானாலும் ஒவ்வொருவரும் இன்றிமையாத வரேயாவர். அவருக்காகவே அந்த பாத்திரம் - அந்த பாத்திரத்திற்காகவே அவர். உதாரணமாக ஒரு மோட்டார் வாகனம் சீராக ஓடுவதற்கு, தேவையான உபகரணங்கள், பெரிதானாலும், சிறிதானாலும் இடம் மாறாமல், அந்தந்த இடத்தில் பொருத்தப்பட்டும், ஒவ்வொன்றும் அதனதன் வேலையைச் செய்ய வேண்டியதும் அவசியமானதாக இருக்கின்றது. அதைப்போலவே, எந்த ஒருவருடைய பாத்திரமும், எவ்வளவு சிறப்பானதாகக் காணப்பட்டாலும், மற்றவரைவிட சிறப்புடையது என்பதல்ல. ஒவ்வொன்றும் சிறப்புடைய தேயாகும். ஆதலால் இவ்வுலக வாழ்க்கையில் எனது பாத்திரத்தை கவனமாகவும், துல்லியமாகவும், சிறப்பாகவும் செய்யுமளவுக்கு, நான் திருப்தியுடையவனாகவும், பொறாமையால் பாதிக்கப்படாமலும் இருக்க முடியும்.**

# எனது கேள்வியும் - இறைவனின் பதிலும்

பி.கு. செல்வநாதன், அண்ணாநகர், சென்னை.



**கேள்வி: கடவுளே! ஏன் இந்த சிருஷ்டி இவ்வாறு துக்கமானதாக படைக்கப்பபட்டது? ஏன் நாங்கள் உங்களை அடைய இவ்வளவு கஷ்டப் படவேண்டும்?**

**பதில்:** இனிமையான குழந்தையே! இதற்கு காரணத்தைக் கூறுகிறேன் கேட்பாயாக! இப்பொழுது நடக்கும் காட்சியின் அடிப்படையில் முடிவுக்கு வரக்கூடாது. நாடகத்தினை முழுமையாகத் தெரிந்துக்கெண்டால் மட்டுமே அந்த நாடகத்தின் ஒவ்வொரு காட்சியின் முக்கியத்துவத்தை உணர முடியும்.

இந்த நாடகத்தில் எந்த ஒரு காட்சியும் அர்த்தமற்றதாக படைக்கப்படவில்லை. அதனால் தான் கீதையில் கூறப்பட்டுள்ளது:

**நடந்தது எவையோ அது நல்லது !**
**நடப்பவை எவையோ அது மிக நல்லது !!**
**நடக்க இருப்பவை மிக மிக நல்லது.!!!**

உனக்கு வாழ்க்கையின் ஆதி முதல் இது வரை நடந்து இருப்பவை என்ன எனும் ரகசியத்தை கோடிட்டு காட்டுகிறேன். கவனமாக கேட்பாயாக?

ஆம், நீ கூறுவது போல் இவ்வுலகம் அதாவது என்னுடைய இப்படைப்பு இன்று மோசமான நிலையில், மனிதர்கள் வாழ்விற்கு தகுதியற்ற நிலையில் இருப்பது உன்மையே. ஆனால் சற்று சிந்திப்பாய். மனிதர்களான உங்களது படைப்பே எவ்வளவு சிரேஷ்டமாக உள்ளது விஞ்ஞானத்தினால் நீங்கள் படைக்கும் ஒவ்வொரு சாதனமும் மிக நல்ல முறையில் படைக்கவே முயற்சிக்கப்படுகிறது. ஒரு தொழிற்சாலையில் இருந்து வெளியாகும் அவர்களுடைய படைப்பு தரம் உயர்ந்ததாக இருக்க முழு கவனம் எடுத்துக் கொள்கின்றார்கள்.

எந்த பொறியாளரும் பழைய வீட்டை கட்டுவதில்லை. எந்த உணவும் பழைய உணவாக சமைக்கப்படுவதில்லை. அதனால் இவ்வுண்மையை புரிந்து கொள்வாயாக!

எந்த ஒரு படைப்பும் மிக நல்ல முறையில் படைக்கவே மனிதர்கள் முயற்சிக்கிறார்கள், படைக்கிறார்கள், இப்படியிருக்க ஞானக் கடலான நான் என் குழந்தைகளாகிய உங்களுக்கு படைத்த இவ்வுலகம் எப்படி குறைபாடுகள் உடையதாக இருக்க முடியும். என்னுடைய படைப்பு ஆதியில் பஞ்ச தத்துவங்கள் கூட மனிதர்களுக்கு பரிபூர்ணமான சாந்தியையும், சுகத்தையும் கொடுக்கும் நிலையே இருந்தது. இத்தகைய உலகத்தை சொர்க்கம், ஃபாரடைஸ், கார்ட்ன் ஆஃப் அல்லா, எல்டராடோ என புகழ் பாடி வந்துள்ளீர்கள்.

ஆனால் இயற்கையின் நியதி எந்த ஒரு படைப்பும் உபயோகப்படுத்த உபயோகப்படுத்த கால ஓட்டத்தால் அதன் சக்தியிலும், தரத்திலும், குறைபாடு ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இந்த விதிக்குட்பட்டு நீங்கள் பல்லாயிரம் ஆண்டுகள் இப்படைப்பை உபயோகித்து வந்ததால் இன்று இந்த படைப்பு தரம், இழந்து, குணம் இழந்து மோசமான நிலைக்கு வந்துள்ளது.

நான் சொர்க்கமாகப் படைத்த இவ்வுலகம் இன்று நரகமாகியுள்ளது. தேவதைகளாக இப்பூமிக்கு வந்த நீங்களும் இன்று அசுர குணமுடையவர்களாகி விட்டீர்கள். சுகம் நிறைந்த இந்த உலகம் இன்று துக்க உலகமாக ஆகிவிட்டது. அகிம்சையான இவ்வாழ்க்கை

இம்சை நிறைந்ததாகிவிட்டது. மலர் தோட்டம் முட்காடாகி விட்டது. ஆன்மீக பலத்தை நம்பி வாழ்ந்த நீங்கள் ஆயுத பலத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த நீங்கள் இன்று பணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஆனால் இது யாருடைய தவறும் அல்ல. இது வாழ்க்கை நாடகம், படைப்பு எவ்வளவு சிறந்ததாக இருப்பினும் அதுவும் ஒரு நாள் தரமிழந்து மோசமாகியே தீரும். இது காலத்தின் கட்டாயம். அதை மீண்டும் சரியான நிலைக்கு கொண்டு வர அந்த படைப்பைப் பற்றி அறிந்த ஒருவர் தேவைப்படுகிறார். உதாரணத்திற்கு நீங்கள் ஒரு புதிய வாகனத்தை வாங்குகிறீர்கள். ஆனால் அந்த வண்டி சில காலம் உபயோகித்து பழுதடையும் போது அந்த வண்டியைப் பற்றிய ஞானம் உடைய மெக்கானிக்கை தேடி செல்கிறீர்கள். நம் உடலை படைத்த தாய் தந்தையர் அந்த உடல் நலம் கெடும்போது அதை சரி செய்ய அதை நன்றாக தெரிந்த மருத்துவரை நாடுகிறார்கள். நோயை தீர்க்கும் மருத்துவரையே அந்த நோய் வருவதற்கு காரணம் என கூறுவது, வாகனத்தை சீர்படுத்தும் மெக்கானிக்கையே அந்த வாகனம் கெட்டுப்போனதற்கு காரணம் காட்டுவது எவ்வளவு அறியாமையோ அதுபோல் இந்த உலகத்தினை மீண்டும் சரியாக மாற்றக்கூடிய ஞானத்தை அளித்து அதன் மூலம் உங்களை துக்கத்திலிருந்து விடுவித்து மீண்டும் இவ்வுலகை ஒரு சுகமான உலகமாக மாற்ற நினைக்கும் என்னையே இப்படைப்பின் சீரழிவிற்கு காரணமாக கூற ஆரம்பித்து விட்டீர்கள். நான் உங்களிடம் கொடுத்தது சத்யுகம் - சம்பூர்ணமான சுகம் சாந்தி, அன்பு, ஆனந்தம் நிறைந்த ஒரு உலகம். அசாந்தி துக்கம், பயம் போன்ற வார்த்தைகளே அறியாத உலகம். இதையே நீங்கள் சொர்க்கம், ஃப்ரடைஸ், வைகுண்டம் என பல பெயர்களால் கூறி வருகிறீர்கள். அக்காலத்தில் மனிதர் களாகிய நீங்கள் தேவதைகளாக சுகமாக வாழ்ந்தீர்கள். இது உண்மை. ஆனால் இதை மறந்து தேவலோகம் என்பது மேலே எங்கேயோ உள்ளது என்றும் நரகம் என்பது பாதாளத்தில் எங்கோ உள்ளது எனவும் நீங்கள் நம்பினால், அது தவறானதாகும்.

சொர்க்கமும் நரகமும் இந்த பூமியே. ஆனால் வேறு வேறு கால கட்டத்தில். மேடை ஒன்றே, ஆனால் காட்சிகளும் மற்றும் நடிகர்களின் நடிப்பும் மாறிக் கொண்டே இருக்கிறது. தேவதைகளும், அசுரர்களும் நீங்களே ஆனால் வெவ்வேறு கால கட்டமாகும். இவ்வாழ்க்கை நாடகம் உயர்வு, தாழ்வு, உண்மை, பொய், வெற்றி, தோல்வி தர்மம்-அதர்மம் ஆகியன கலந்த ஒரு விளையாட்டு ஆகும். இப்பொழுது இருக்கும் நிலையை மட்டும் நீங்கள் கருத்தில் கொண்டு இப்படைப்பு துக்கம் நிறைந்ததாக கருதுகிறீர்கள். எப்போதெல்லாம் இப்பூமியில் அதர்மம் ஓங்குமோ அப்பொழுதெல்லாம் நான் அவதரித்து மீண்டும் தர்மத்தை நிலை நிறுத்து வேன் என்ற என் உறுதிமொழியினை நிறை வேற்ற இறைவன் அவதரிக்கும் காலமே இக்கலியுக இறுதியான சங்கமயுகம். அனை வருக்கும் மங்களம் ஏற்படக்கூடிய சங்கமயுக த்தில் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். வெகு சீக்கிரத்தில் இப்படைப்பு மீண்டும் தலை சிறந்ததாக மாறப்போகிறது எனும் உண்மையை உணருவீர்களேயானால் மகிழ்ச்சியாக இவ்வாழ்க்கையை எதிர்கொள்வீர்கள்.

**கேள்வி: நாங்களே தேவர்கள் என்றால் அச்சமயத்தில் எங்களுக்கு பல கைகள், 4 தலைகள் போன்றவை இருந்ததா? பின் அது ஏன் இப்பொழுது இல்லை?**

**பதில்:** மனிதர்கள் என்றும் இரு கைகள் ஒரு தலை போன்ற இன்றைய உடல் அமைப்பிலே வாழ்க்கின்றான். இச்சிருஷ்டியில்

பல கைகள், பல தலைகள் உடைய மனிதர்கள் என்றும் வாழ்ந்ததில்லை. அன்று ஆத்மா திவ்ய குணங்களோடு தெய்வீக தன்மையோடு அனைவருக்கும் கொடுக்கக்கூடியவர்களாக (தேனே வாலா) இருந்ததால் தேவர்கள் எனப்பட்டார்கள். அதே ஆத்மா இன்று அவ குணங்களோடு மற்றவர்களுக்கு ஹிம்சை கொடுக்கும் அசுர உணர்வோடு வாழ்வதால் அசுரர்கள் எனப்படுகிறார்கள். மற்றபடி பல கைகள், பல தலைகள் போன்றவை தேவர்கள் பலவிதமான ஆன்மீக சக்தி நிறைந்தவர்கள் என்பதை உணர்த்துவதற்காக உருவாக்கப்பட்ட கற்பனை சித்திரங்களே! இவை அனைத்திற்கும் ஆன்மீக தாத்பரியங்கள் உண்டு. ஆனால் அவற்றை நீங்கள் ஸ்தூலமாக மாற்றி கொண்டு விட்டீர்கள்.

**கேள்வி: இறைவா! நீங்கள் இப்பொழுது தான் தர்மத்தை நிலைநாட்ட இப்பூமியில் அவதரிக்கிறீர்கள் எனில் இதிகாச புராணங்களால் பல கால கட்டங்களில் பல அவதாரங்கள் எடுத்து இருப்பதாக கூறப்பட்டுள்ளதே? உங்களுடைய உண்மையான வருகை எப்போது?**

பதில்: இதிகாசங்களும், புராணங்களும் துவாபரயுகத்தில் எழுதப்பட்டது - அதாவது இச்சிருஷ்டியில் தேவன் எப்பொழுது தெய்வீக தன்மை இழந்து அசுர குணங்கள் உடையவனாக தரம் குறைகின்ற கால கட்டமாகும். இவ்வாறு மனிதன் தெய்வீக தன்மை இழப்பதை தவிர்ப்பதற்காக அவனுடைய குணங்கள், செயல்பாடுகள் ஆகியவை தரம் குறையாமல் இருக்க வேண்டும் எனும் நல் நோக்கத்தோடு பல முனிவர்களால் எழுதப்பட்டவை இக்காவியங்கள். இதன் மூலம் மானிட வாழ்வின் தரம் கீழிறங்கும் வேகத்தை மட்டுப்படுத்தக்கூடிய தடைகற்களாக பயன்பட்டது. இவ்வாறாக மனிதர்களால் மனிதர்களின் சீரழிவை கட்டுப்படுத்துவதற்கான ஒரு நல்ல நோக்கத்துடன் ஏற்பட்டவைகளே வேதங்களும், இதிகாச புராணங்களுமாகும்.

இவை பல ஞானிகள், தபஸ்விகளால் இவ்வுலகிற்கு அளிக்கப்பட்ட அறிவுரைகள். இறைவனின் படைப்பு, மற்றும் அவருடைய மகிமைகள் எப்படிப்பட்டது என்பதை மனிதர்களுக்கு உணர்த்துவதற்காக உருவாக்கப் பட்ட கதாபாத்திரங்களாகும். ஆனால் யாரும் இறைவனின் முழுமையான அறிமுகத்தை அளிக்கவில்லை. இவையாவும் உண்மை யிலேயே இறைவன் அவதரித்து கூறப்பட்ட அறிவுரைகளாக இருக்குமானால் அதை பின்பற்றும் உங்களுடைய வாழ்க்கை முறை உயர்ந்து இருக்க வேண்டும். ஆனால் இன்றைய உண்மை நிலை என்னவென்று உங்களுக்கேத் தெரியும். மனித குலம் மிகப்பெரிய கலாச்சார சீரழிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. தேவர்கள் சம்பூர்ண இரட்டை அகிம்சைவாதிகள். அவர்கள் யாரையும் அழிக்க நினைப்பதில்லை. அதனால் தேவதைகள் வாழ்ந்த சத்யுகம், திரேதாயுகத்தில் யுத்தங்கள் கிடையாது. யுத்த மைதானத்தில் அறிவுரையும் அளிக்கப்படவும் இல்லை. இன்றைய கர்ம க்ஷேத்திரம் எனும் யுத்த மைதானத்தில் மனித ஆத்மாக்கள் மனதில் ஏற்படும் போராட்டத்தில் வெற்றி கொள்வதற் காக சான்றோர்களோல் அளிக்கப்பட்ட அறிவுரைகள், சிரேஷ்டமானவை, ஆனால் அவற்றின் ஆன்மீக ரகசியங்களை புரிந்து கொள்ளாமல் ஸ்தூல விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டீர்கள்.

ஆனால் இந்த அறிவுரைகளும் மீறப்பட்டு மனிதகுலம் மிக மோசமான நிலைக்கு வந்து இருப்பதே அதர்மம் நிறைந்த இன்றைய கலி யுகமாகும். மனிதர்களின் அறிவியலும், ஆன்மீக நெறிமுறைகளும், அரசியல் வழி முறைகளும் செயலற்று போகும்போது பரம்பிதா பரமாத்மாவாகிய ஒளிப்புள்ளி

வடிவான பகவானாகிய நான் இப்பூமிக்கு அவதரிக்க வேண்டியது அவசியமாகிறது. இதுவே அதர்மம் நிறைந்த கலியுகத்தின் இறுதி, இதுவே நன்மையும், தீமையும், நல்லவர் களும், அல்லவர்களும் கலந்து இருக்கக்கூடிய இக்கால கட்டம் சங்கமயுகம் ஆகும். ஆத்மாவும், பரமாத்மாவும் சந்திக்கக்கூடிய யுகம் ஆகும். என் வழிப்படி நடந்து மனித ஆத்மா தன்னை முன்னேற்றி கொள்ளும்போது அவனே மீண்டும் இந்நாடகத்தில் தேவனாக மாறுகிறான். இதனாலேயே இது புருஷோத்தம சங்கமயுகம் எனப்படுகிறது. இக்காலக்கட்டத்தில் நான் ஒரு சாதாரண மனிதரின் உடலில் பிரவேசமாகி மனித சமுதாயத்திற்கு தேவை யான ஞான கருத்துக்களை அளித்து மீண்டும் இவ்வுலகை தேவதைகள் வாழும் உலகமாக மாற்றுவது என்னுடைய காரியமே. இதற்கான வழியை எந்த ஒரு மனித குருவோ, ஞானியோ வேதமோ சாஸ்திரமோ வழி காண்பிக்க முடியாது.

இவ்வுலக சிருஷ்டியின் ஆயுட்காலம் 5000 வருடங்களாகும். 5000 வருடங்களுக்கு ஒரு முறை இந்த படைப்பு தன் சதோபிரதான தூய நிலையிலிருந்து தமோபிரதானமான தூய்மையற்ற நிலையை அடைகிறது. இந்த விதிமுறைக்கு அனைத்து ஆத்மாக்களும் மற்றும் இயற்கையும் கட்டுப்படுகிறது. இதில் யாருடைய தவறும் கிடையாது. இது நாடகத்தின் விதியாகும். ஆனால் இந்த விதியை உணராமல் நாம் வாழ்க்கை விளையாட்டை விளையாட முற்படுவதால் இவ்விளையாட்டில் வெற்றியை அனுபவம் செய்வதில்லை

அதனால் களைப்படைந்து விடுகிறீர்கள், நம்பிக்கையிழந்து விடுகிறீர்கள். இச்சமயத்தில் தான் நான் இப்புவியில் அவதரித்து அனைத்தையும் சரி செய்ய வேண்டிய என்னுடைய கடமை முக்கியத்துவம் பெறுகிறது.

இதனால் தான் கீதையில்

**யதா யதாய தர்மஸ்ய கிலானி....** என்று கூறப்பட்டுள்ளது. இதனுடைய பொருள் எப்பொழுதெல்லாம் இவ்வுலகின் தர்மத்திற்கு சீரழிவு ஏற்பட்டு அதர்மம் ஓங்குமோ அப்பொழுது பூமியில் இறைவனாகிய நான் அவதரிக்கிறேன் என்பதாகும். ஆனால் அதில் ஏற்பட்ட ஒரு தவறு நான் யுகம் யுகம் அவதரிப்பதாக கூறப்பட்டதாகும். நான் யுகம் யுகம் அவதரிப்பதில்லை. அவ்வாறு என்னுடைய அவதாரம் யுகம் யுகம் ஏற்படுமாயின் துவாபரயுகத்திற்கு பிறகு அடுத்து வரும் யுகம் சுகமான காலமாக இருந்து இருக்க வேண்டும். ஆனால் துவாபரயுகத்திற்கு பிறகு கலியுகம் வந்துள்ளது. மனித வாழ்வு மேலும் தரமிறங்கியுள்ளது. எனில் இறைவனின் அவதாரத்தால் எந்த ஒரு பலனும் ஏற்படவில்லை என்றாகிறது. பின் யார் இச்சிருஷ்டியை புனரமைக்க தகுதியுள்ளவர்?

மாறாக நான் கல்பத்திற்கு ஒரு முறை அதாவது 5000 ஆண்டுகளுக்கு ஒரு முறை மனிதனின் வாழ்க்கை அதர்மம் நிறைந்ததாக முற்றிலும் தேக உணர்வால் கீழான நிலை யடையும் கால கட்டமான கலியுக இறுதியில் அவதரிக்கின்றேன். இங்கு தான் மனிதர்கள் அனைவரும் துக்கத்தை அனுபவிக்கின்றனர். அனைவரும் அவரவர் வழியில் என்னை அழைக்கின்றனர், என் குழந்தைகளாகிய உங்களின் துயர் நீக்க கலியுகத்திலேயே என்னுடைய அவதாரம் அவசியமாகிறது. இவ்வுலக சிருஷ்டிக்கு ஆதாரம். மனித ஆத்மா உயர்ந்த சிந்தனையில் செயல்படும்போது இவ்வுலகமும் உயர்ந்த நிலையில் இருக்கிறது. மனிதனுடைய அறியாமையால் அவனுடைய சிநத்னையில் தரம் கீழிறங்கும்போது வாழ்க்கை தரமும் மோசமாகி விடுகிறது. இச்சமயத்தில் ஞானக் கடலான நான் என்னிடத்தில் இருக்கும் மெய் ஞானத்தை மனித

சமுதாயத்திற்கு அளித்து அவனுடைய அறியாமையின் இருளை நீக்கி சிந்தனையை மேம்படுத்துகிறேன். இதனால் அவனுடைய செயலில் தூய்மையும், மேன்மையும், வலி மையும் ஏற்படுகிறது. இவ்வுலகம் மீண்டும் சுகமானதாக, சொர்க்கமாக மாறுவதற்கு காரண மாகிறது. எனவே உண்மை என்னவெனில் நீங்கள் மாறினால் உங்களை சுற்றி இருக்கும் உலகமும் மாறும்,

இதை உணர்ந்து உங்களை உயர்த்திக் கொண்டு மீண்டும் இப்பூமியில் சொர்க்கத்தை கொண்டுவரும் காலத்தின் விளிம்பில் அமர்ந்திருக்கின்றீர்கள். இதுவே நான் அவதரிக்கும் காலம் புருஷோத்தம சங்கமயுகம், புருஷ் எனப்படும் ஆத்மா உத்தமமாக வேண்டிய யுகம்.

அனைத்து உண்மைகளையும் அறிய வேண்டிய நேரம். அனைத்தும் மாற வேண்டிய காலம். என் பணி துவக்கப்பட்டு அதாவது நான் இப்பூமியில் 1936ல் அவதரித்து 76 ஆண்டுகாலமாக இக்காரியத்திற்கான பணி நடந்து கொண்டிருக்கிறது.

## அணையா விளக்கு (பாட்டு)

**பி.கு. நடராஜ், கரூர்**

அணையா விளக்கொன்று அழைக்கிறது
அதனையே என் மனம் நினைக்கின்றது
பூங்காற்றாய்த் தழுவி அணைக்கின்றது
நீர் ஊற்றாய் வந்தெனை நனைக்கின்றது

ஒளியென்னும் வடிவாய் ஜொலிக்கின்றது
என் வழியாய்த் துணையாய் இருக்கின்றது
அளவில்லா அன்பினை அளிக்கின்றது, அதில்
அழிவில்லா ஆத்மா திளைக்கின்றது

பரந்தாமமே எனது வீடானது
பரம்ஜோதியே எந்தன் உயிரானது
சிவநேசமொன்றே கருவானது
அன்பொன்றானதில் உருவானது

கடலாய்கிடக்கின்ற ஞானத்திலே நான்
கட்டுமரமாய் மிதக்கின்றேன் யோகத்திலே
என் பாவங்கள் உந்தன் பாதத்திலே
நான் அமைதியில் திளைக்க வேண்டும் பரந்தாமத்திலே

பாகாய் இனிக்கின்ற மனம் உனக்கு
உன்னால் பூவாய் மலருதே முகம் எனக்கு
புதிதாய் வருகின்ற கணக்கெதற்கு
புதுயுகத்தில் தெரிந்துவிடும் விடையதற்கு

# பரிபக்குவ நிலை



**பி.கு செண்பகராஜ், மதுரை**

வெற்றிகரமான வாழ்க்கை என்பது பரிபக்குவமான முடிவுகளை பிறப்பிப்பதாகும். **பரிபக்குவம்** என்பதை முதிர்ச்சி, கற்றுத் தேர்ந்த நிலை, ஆழ்ந்த அனுபவம் என்றும் கூறலாம். எதையும், எச்செயலையும் பக்குவமாக அதாவது விதிப்படி செயல்படுத்தும் பொழுது அதில் வெற்றி கிட்டும். உதாரணமாக நல்ல விதையை விதைத்தபின் அதை பக்குவமாக வளர்க்க வேண்டும், இல்லையெனில் அது பலன் தராது.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையில் 10 வயது வரை மிக முக்கியமான காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் ஒருவர் எதைப் பார்க்கின்றாரோ, கேட்கின்றாரோ, உணர்கின்றாரோ மேலும் கற்றுக் கொள்கின்றாரோ அதுவே அவர் வாழ்க்கையாக அமைகின்றது. பக்குவத்தின் ஆரம்பமே இங்கு தான் ஏற்படுகின்றது. இவ்வயதில் நல்வழியை ஒருவருக்கு காட்டிவிட்டால் அவர் உலகையே ஆளுவார் என்பதில் சந்தேகமில்லை. ஒருவரின் முன்னேற்றத்தை இக்காலகட்டத்தில் கணித்து விடலாம். எனவே தான் **விளையும் பயிர் முளையிலே தெரியும்** என்கின்றார்கள். தெளிவு, அறிவு, ஞானம் இவற்றிக்கு அதாரமான **புரிதல்** (Understanding) என்பது இவ்வயதில் மிக அவசியமானது. 10 ஆண்டுக்கு முன் காட்டில் தனது இளவரசனை தொலைத்த இராஜா, தற்பொழுது காட்டில் ஒரு புதுவிலங்காக தன் மகனை கண்டு வியந்து, அவரை இளவரன் என்று புரியவைக்க கஷ்டப்படவேண்டியதாயிற்று. இவ்வயதில் எதைப் புரிந்து கொள்கிறோமோ அதுவே ஒவ்வொருவரின் வாழக்கையாகின்றது. புரிந்து கொள்ளும் கலை, ஒரு மனிதனை மிருகத்திடமிருந்து பிரித்துக் காட்டுகின்றது. ஆகையினால் தான் புரிந்து கொள்ளாதவரை விலங்குடன் இணைத்து பேசுகின்றார்கள். பொதுவாக ஒருவர் கூற மற்றவர் முதலில் **அறிவர்** பின்பு அதை சிறிது சிந்தித்தாரானால் அது புரியப்படும். புரிந்ததை மீண்டும் செயல்படுத்தினாரானால் அது **அனுபவமாக** மலரும். அதாவது **பயிற்சி** எந்த ஒரு வெற்றிக்கும் மிகவும் அவசியமானது. பயிற்சியே ஒரு மனிதனை முழுமையாக்கும் **அனுபவத்தை** கொடுக்கிறது. பல அனுபவங்களின் கோர்ப்புதான் மனிதனை உணர்வுப் பூர்மான, மனிதாபிமான செயலை செய்ய வைக்கின்றது. இதைத் தான் பரிபக்குவம் என்கின்றோம்.

பரிபக்குவமான நிலையில் மனிதனிடம் பொறுமை, அன்பு, பணிவு, இனிமை, உறுதி, தைரியம், சக்தி, ஆனந்தம் மற்றும் கம்பீரம் போன்ற அனைத்து குணங்களும் நிரந்தரமாக இருக்கும். அதாவது இவை இருந்தால் அதற்கு பெயர் பரிபக்குவம். எல்லாம் தெரியும் என்ற ஆணவம். கோபம், மனிதாபிமானமின்மை, மன அழுத்தம், அவசரம் போன்ற எதுவும் இருக்காது. உதாரணமாக காய்ந்த ஓலை சலசலக்கும் என்பர். அதாவது பரிவக்குவநிலை நிறைகுடம் போன்றது. கல்யாணப் பந்தியில் முதலில் இருக்கும் கூச்சல், உணவு பரிமாறியவுடன் குறைந்து போகும். எதுவும் நிறையும் பொழுது பக்குவம் ஆகிவிடுகின்றது. தேனீயின் ரீங்காரம் தேன் பருகும் வரைதான்.

பரிபக்குவநிலை அடைவது மிக எளிது. ஆனால் அதற்கான விதிமுறைகள் கடினம். அதாவது **அழிப்பது எளிது, ஆக்குவது கடினம், படிப்பது எளிது நடப்பது கடினம், சொல்வது எளிது செயவதே கடினம்,** என்று

கூறிக்கொண்டே போகலாம். ஒரு புதுக் கவிதையை நினைவு கூறுவது அவசியமா தெனில்

**கஷ்டம் கண்டு துவளாதே!**
**அது நல்ல காலத்தின் துவக்கம் !**
**எளிது கண்டு தூங்காதே!**
**அது ஏமாற்றத்தின் துவக்கம்! என்பர்.**

எப்பொழுதும் செயல்முறை கடினம் தான். அதை செய்துவிட்டால் இலக்கும் மிக எளிதுதான். உதாரணமாக கோவிலில் படிக்கல்லாக கிடப்பதை காட்டிலும் பூஜைக்குரிய மூர்த்தியாக ஆவது கடினம்தான். கூட்டுப் புழுவாக அடைப்பட்டு பொறுமையாக இல்லையென்றால் வண்ணத்துப்பூச்சியாவது கடினம்தான். கடல் நீரும் சிப்பிக்குள் சவம் போன்றதொரு தவம் செய்யாதொளிய முத்தாவது கடினம் தான். துவச்சலின்றி, உளியும் உன்னதப் பொருளை உருவாக்குவது கடினம் தான். குழந்தையும் குத்தகைக்கு 10 மாதம் குந்தியினுள்ளே இல்லையெனில் கூத்தாடி உடைந்திடுமே! இறைவனை தேடுவது ஒரு பக்கம் இருந்தாலும் தனது வாழ்க்கையில் உயர்ந்த நிலை அடைய அனைவரும் முயற்சிப்பது உண்டு. சுருங்கக்கூறின் இதற்காகத் தான் இறைவனை தேடுகின்றோம் என்பது சத்தியம்.

இன்றைய உலகில் மனம் போன போக்கில் மனிதர்கள் வாழ்கின்றர்கள். எது கிடைக்கிறதோ, அதை எப்படி பயன்படுத்த கூடாதோ, அப்படி பயன்படுத்துகின்றார்கள். இப்படித்தான் வாழவேண்டும், அப்படித்தான் வாழவேண்டும் என்று தானாக ஏதாவது நினைத்துக்கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். பரிபக்குவம் நாம் ஆகிவிட்டோமா என்பது நமக்கு தெரியாது. ஆனால் நம்முடைய செயலே அதை காட்டும் கண்ணாடி. நமது நடத்தையை ஒழுங்காக ஆக்க அறம் கூறும் வழியாதெனில், தானும் சுகமாக இருந்து மற்றவர்களுக்கும் சுகம் கொடுங்கள், யாருக்கும் துக்கம் கொடுக்காதீர்கள், யார் தரும் துக்கத்தையும் எடுக்காதீர்கள் என்பது தான்.

இந்நிலை அடைய நீண்ட காலம் ஆகும் என்றும், நம்மால் இதை அடைய முடியாது என்றும் ஒரு பொழுதும் நினைத்துவிட வேண்டாம். அதற்கு எளிமையான வழிமுறைகள் உள்ளன. நற்சிந்தனைகளை எழுப்பும் தியானம், தன்மீதும் பிறர் மீதும் ஆக்கபூர்மான எண்ணங்களை எழுப்புதல், எதிரியாக இருந்தாலும் சுபமான பாவனை, சுபஆசை வைத்தல். இவற்றை தினமும் மேற்கொண்டாலே பரிபக்குவநிலை எளிதாக அடைந்து விடலாம். ஒரு ஊரில் ஒரு குருகுலம் இருந்தது. அங்கு ஒரு முனிவர் பல சிஷ்யர்களுடன் வாழ்ந்து வந்தார். ஒரு முறை தனது சிஷ்யர்களிடம் உங்களது வாழ்க்கையின் இலட்சியம் என்ன? என்று கேட்டார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலை இலட்சியமாக கூறினார்கள். ஆனால் யாரை தனது முதல் சிஷ்யர் என்று நினைத்துக் கொண்டிருந்தாரோ அவர் எதுவும் கூறவில்லை என்பதை அறிந்து வியந்து ஏன் இந்த மவுனம் என்று வினாவினார். அதற்கு, அந்த சிஷ்யர் மவுனம் கலைத்து கூறியது என்னவென்றால், தனது வாழ்க்கையின் இலக்காக எதுவும் அறிதிட்டுக் கூறாமல், காலத்தின் கோலம், வாய்ப்புகளின் வடிவம், வசதியின் வண்ணம் இவை எனக்கு எதை தருகின்றதோ, அதை மனதார ஏற்றுக் கொள்வேன் என்றும் இலக் கென்று எனக்கு எதுவும் இல்லாமல் இல்லை, ஆனாலும் என் முடிவை பிறப்பிப்பது- தன் விடாமுயற்சி, காலம், இறை சக்தி இவைதானே தவிர வேறு எதுவுமில்லை, இதைத்தான் நான் முன்வைக்கின்றேன் ஆகையால் மவுனம் காத்தேன் என்று பொறுமையாக பதில் கூறினார். அப்படியானல் எது பரிபக்குவம் என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்களேன்.

# கலியுகம் குட் பை....

பி.கு. தேவராஜ், எம்.பி.ஏ. எம்.பில், பவானிசாகர்




சங்கமயுகம் ஜனவரி 2012 இதழ் என் கைகளில் தவழ்ந்து கொண்டிருந்த நேரம், நான் சத்திய யுக கற்பனையில் மிதந்து கொண்டிருந்த தருவாயில் வீட்டில் உள்ளோர் தொலைக்காட்சி பெட்டியில் மூழ்கியிருந்தனர். அதில் வந்த செய்திகள் அனைத்தும் மிகவும் மோசமான தாகவும், நம்ப முடியாத அளவுக்கும் அக்கிர மங்களாக இருந்தன. மனிதர்களை விட அந்த மாதிரி வேறு உயிருனங்களாக பிறவி எடுப்பது எவ்வளவோ மேல் என்ற எண்ணம் தோன்றும் அளவுக்கு இருந்தது இந்த செய்தி.

பூ போன்று மென்மையாகவும், கிளி போன்று சொல்வதை திரும்பி சொல்வதை போல் பகவானின் ஒவ்வொரு அடியையும் பின்பற்றும் கிளியாகவும், மயில் போன்று தூய்மையாகவும் வாழ்ந்த நாம் இன்று அரக்க குணம் படைத்த மனிதர்களாக மாறிவிட்டதற்கு காரணம் யார்? பகவானா? அப்படியானால் அந்த மாதிரி பகவானை நாம் ஏன் பூஜை செய்ய வேண்டும் என்று நாஸ்திகர்கள் கேட்கும் அளவிற்கு மனிதன் மாறிவிட்டான். பகவானின் ஆஸ்தியில் இருந்து வஞ்சிக்கப் பட்டு விட்டான். இதன் கூடவே இயற்கை சீற்றங்களும் எல்லையை கடந்து சென்று கொண்டிருக்கின்றது என்பதை பார்க்கும்போது கலியுகம் என்பது சீக்கிரமாகவே காலியாகி விடும் என்பது உண்மையாகிறது. கடவுளின் படைப்பு தான் இத்தனைக்கும் காரணம் என்று கூறும் மனிதர்கள் உள்ள உலகம் இது.

ஆனால் உண்மையில் பகவான் அவ்வாறு படைத்தாரா என்ன? இதை சிறிது சிந்தியுங்கள், கலியுக மனிதரால் எழுதப்பட்ட பாடல் ஒன்றின் சில வரிகள் :

**கள்ளம் இல்லா பிள்ளை உள்ளம்**
**நான் (கடவுள்) தந்தது....**
**காசும், பணமும் ஆசையும்**
**ஏன் வந்தது** என்றும்,
**எல்லையில்லா நிலமும், நீரும்**
**நான் தந்தது எந்தன் சொந்தம்**
**என்ற எண்ணம் ஏன் வந்தது**

என்ற பாட்டின் அர்த்தம் தான் என்ன?

பகவானின் படைப்பு அனைத்துமே உயர்ந்தது என்பது தானே உண்மை. இதிலி ருந்து கடவுள் கலியுகத்தினை துக்கப்படுவதற் காக படைக்க வில்லை என்பது நிதர்சனம்.

அப்படியானால் இன்று ஏறக்குறைய 700 கோடிக்கும் மேலான மக்களில் சில லட்சம் பேர் தான் சத்யுகத்தில் உலாவருவார்கள் என்ற கடவுளின் வாக்கை மெய்பிக்க இப்போது நாம் செய்ய வேண்டியது தான் என்ன?

இந்திய ஆட்சிப்பணி, இந்திய அயல் பணி, இந்திய வருவாய் பணி, இந்திய வனப் பணி, இந்திய காவல் பணி ஆகிய தேர்வு களில் மிகுந்த சிரத்தை எடுத்து படிப்பவர் தான் தேர்ச்சி அடைவார்கள், அதுவும் முதல் நிலை, இறுதித் தேர்வு, நேர்காணல் ஆகிய இனங்களில் வெற்றி பெற்றவர் தான் இறுதியில் உயர் பணியில் வேலை வாய்ப்பு பெற தகுதி பெறுகிறார். அதுவும் சிறந்த மதிப்பெண் பெறுபவர் உயரிய பதவியில் அமர்த்தப்படுவார். அதுபோல் தான் இந்த இம்சை நிறைந்த கலி யுகத்தின் கடைசியில் பகவான் வந்து இராஜயோகம் என்ற வாழும் கலையை கற்றுக் கொடுத்து நாம் சத்தியயுகத்திற்கு செல்ல அதாவது தேவதையாக ஆக்குவதற்காக வந்துள்ளார், தெய்வீக குணங்கள் நிறைந்த மனிதர்கள் (தேவதைகள்) இருக்கும் உலகத்திற்கு நாம் செல்வதற்கு ஒரே வழி இந்த சங்கமயுகத்தில் பகவான் வருகின்ற

வேளையில் அவரின் வழிப்படி நடப்பது தான். ஆதலால் இதற்காக நாம் இப்பொழுது நமது புத்தி என்ற காலை கலியுகம் என்ற சேற்றிலிருந்து விடுவித்து பகவான் நமக்கு அருளும், ஞான யோகத்தில் நம்பிக்கை என்ற காலை பதித்து, அவர் வழியில் அடியெடுத்து வைத்து ஒவ்வொரு அடியிலும் நம்மை சிரேஷ்டமாக்கு வோம். கலியுகத்தினை புத்தியில் இருந்து விலக்கி (காலி செய்து) விடியலை (சத்யுகத்தை) வரவேற்போம்.

## சிந்தனைக்கு ஒரு கதை

தமிழாக்கம் - பி.கு. பாலாஜி, புதுக்கோட்டை

ஒருமுறை ஒரு குரு தனது சீடர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது நாம் கோபப்படுகின்ற பொழுது ஏன் உரத்தக் குரலில் பேசுகின்றோம்? மனிதர்கள் தங்களது மனம் பாதிப்படைகின்ற பொழுது ஏன் ஒருவரை யொருவர் உரத்தக் குரலில் சப்தத்துடன் பேசிக் கொள்கின்றனர்? என்று கேட்டார். சீடர்கள் சற்று நேரம் மௌனமாக இருந்து அதற்கான பதிலை சிந்தனை செய்தனர். பிறகு ஒரு சீடன் ஏனெனில் நாம் நமது அமைதியை இழந்து விடுகின்றோம், அதனால் தான் உரத்தக் குரலில் பேசிக் கொள்கின்றோம் என்று பதிலளித்தார். நாம் யாரிடம் கோபப்படுகின்றோமோ அவர் அருகாமையில் இருக்கின்ற பொழுது ஏன் உரத்தக் குரலில் பேச வேண்டும்? என்று மீண்டும் குரு சீடர்களிடம் கேட்டார். அருகில் இருப்பவரிடம் மெதுவாக பேசலாம் அல்லவா! அவ்வாறு பேச முடியுமா? நீங்கள் கோபப்படுகின்ற பொழுது அருகில் உள்ளவரிடத்தில் ஏன் உரத்தக் குரலில் பேசுகின்றீர்கள்? சீடர்கள் பலவாறு பதில்களைக் கூறினாலும் குரு திருப்தியடையவில்லை.

இரண்டு மனிதர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் கோபப்படுகின்ற பொழுது அவர்களது உள்ளமானது மிகவும் தூரமாகி விடுகின்றது. தொலைவில் உள்ளவர் (உள்ளம்) கேட்க வேண்டும் என்பதற்காகவே ஒருவருக் கொருவர் உரத்தக் குரலில் பேச வேண்டி யிருக்கின்றது என்று பதிலளித்தார் குரு. அவர்கள் எந்த அளவிற்கு கோபப்படுகின்றார்களோ அந்த அளவிற்கு அவர்களுக்குள் இருக்கும் இடைவெளி தூரம் அதிகமாகி விடுகின்றது. அதற்காக அவர்கள் உரக்க பேச வேண்டியிருக்கின்றது.

இருவர் தங்களுக்குள் இணக்கமான உறவுடன் இருந்தால் என்ன நடக்கும்? என்று குரு கேட்டார். அவர்கள் தங்களுக்குள் உரக்க பேசிக் கொள்ளாமல் மெதுவாக பேசிக் கொள்கின்றனர். ஏன்? ஏனெனில் அவர்களது உள்ளமானது ஒருவருக்கொருவரின் அருகாமையில் அதாவது இருவருக்கும் உள்ள இடைவெளி மிகவும் குறைவாகி விடுகின்றது.

குரு தொடர்ந்து அவர்களது மனம் ஒன்று போலவே இருந்தால் என்ன நடக்கும்? என்று கேட்டார். அவர்கள் பேசிக் கொள்ளமாட்டார்கள். காதோடு காதாக கிசு கிசித்துக் கொள்வார்கள். இறுதியில் அவர்களுக்கு இதுவும் அவசிய மானதாக இருக்காது. அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு மட்டுமே இருப்பர். அதிலேயே ஒருவரையொருவர் புரிந்து கொண்டு விடுவர். இதுவே மனிதர்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக இருப்பதன் அடையாளமாகும் என்று கூறி முடித்தார்.



## பெருமிதம்

நாம் சில சமயம் நம்மைப்பற்றிச் சிந்தித்துப் பெருமைப்பட்டதுண்டு. குறிப்பாக மற்றவர் நம்மைப்பற்றி உயர்வாகப் பேசும்போது, ஏற்கனவே தனக்குள்ளாகவே அசை போட்டு வைத்திருந்த சிந்தனைகள் பளிச்சென்று புத்தியில் தலைகாட்டும். தன்னிடம் நிறைய சொத்து சுகமிருக்கலாம், புத்திசாலித்தனமும் இருக்கலாம். கௌரவமான தொழில், போதுமான வருமானம், வசதியான வாழ்வு இருக்கின்றது போன்ற திருப்தி. ஆனால் இது தவிர வேறுவிதமாக எப்போதாவது சிந்தனை செய்த ஞாபகமிருக்கின்றதா? உண்மையிலேயே பெருமிதம் கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் என்னிடம் உள்ளதா? என்னுடையவை என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற இவை இல்லாவிட்டாலும் கூட நான் இருப்பேனா? எப்படி இருப்பேன் என்று சிந்தித்துப் பார்த்ததுண்டா?

எதெல்லாம் என்னுடையவை என்று நினைத்துப் பெருமிதப்பட்டுக் கொண்டிருந்தேனோ, அவை ஏதாவதொரு நாள், ஒரு வேளை என்னிடமிருந்து விலகிப் போய்விட்டாலும் கூட நான் பெருமிதத்துடன் வாழ முடியும். இதற்கு உதவக்கூடிய இரண்டு என்னிடம் உண்டு. ஒன்று எனது எண்ணம், இன்னொன்று எனது குணம். இவ்விரண்டும் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படியிருந்தால், உண்மையில் நான் பெருமிதம் கொள்ள முடியும். அவ்வாறிருக்கின்றதா? சோதித்துப் பார்த்ததுண்டா? எனது எண்ணம் உயர்வானதுதான். அப்படியானால் ஊரறிய என்னால் உரக்கச் சொல்ல முடியும் என்ற நிச்சயமிருக்கிறதா?

அடுத்தபடியாக எனது குணம். இதைப்பற்றிய எனது கணிப்பு என்ன? நான் நல்ல குணவானாக இருக்கின்றேன் இப்படி இருப்பதாலேயே நான் சமுதாயத்தில் கௌரவமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்ற மன நிறைவு இருக்கின்றதா?

ஆனால் தன்னைப்பற்றி ஒரு சிலர் வேறு விதமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். உலகம் என்னைப்பற்றி இப்படித்தான் நினைக்கிறது. என்ற தவறான கணிப்புடன் என்னைச் சுற்றிலும் பொய்யான வேலி போட்டு அதன் பாதுகாப்பில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் வெளியில் தெரியாது என்று நினைக்கின்ற நான் எப்படி இருக்கின்றேன்? நான் எப்படிப்பட்ட உண்மையோ, அப்படித்தான் நடந்து கொண்டிருக்கின்றேனா? எனெனில் உண்மை நிரந்தரமாக மறைந்திருப்பதில்லையல்லவா?

ஆகையால், என்னை நான் எப்படிக் காட்டிக் கொண்டாலும் நான் யாரோ அப்படித்தான் உலகம் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. சரியாக என்னைப் புரிந்து கொண்டிருக்கிறது என்று அறிவது தான் அறிவுடமை. ஆதலால் நல்லெண்ணமுடையவர் யாரோ, குணவான் யாரோ. அவரே உண்மையில் பெருமிதம் கொள்ளத் தகுதியுள்ளவர்.

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q -96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை- 40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை- 5
R.No.49463/87




திருச்சி: ஹோட்டல் பிரீஸ் வி.ஐ.பி. புரோகிராமில் உரையாற்ற வருகை தந்த ஆஷாஜியை மலர்செண்டு அளித்து வரவேற்கிறார் திருமதி சாருபாலா தொண்டைமான் அவர்கள்.



திருச்சி: ஹோட்டல் பிரீஸ் வி.ஐ.பி. புரோகிராமில் 200க்கும் மேற்பட்ட பிரமுகர்கள் பங்கு பெற்று பலனடைந்தனர்.






திருச்சி: திருவானைக்கோவிலில் தாய்மார்களுக்கான விளக்கு தியான நிகழ்ச்சியில் (இ.வ.) பி.கு. பங்கஜம், கோட்டயம், பி.கு. மல்லிகா, திருச்சி, திருமதி லதா லக்ஷ்மி, I.P.S. பி.கு. கலாவதிஜி, டைரக்டர் ரிட்ரீட் சென்டர் சென்னை, திருமதி J. ஜோதி, மகளிர் மன்ற தலைவி, டால்மியாபுரம், பி.கு. அனுசூயா, ஈரோடு மற்றும் தியான நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மகளிர்.



திருச்சி: கி.ஆ.பெ. விஸ்வநாதன் ஹையர் செகண்டரி பள்ளி வளாகத்தில் இராஜயோகா மாணவ மாணவியர் வகுப்பில் அனுபவம் பகிர்பவர்கள் பி.கு. வேலாயுதம் மற்றும் அவர் துணைவியார், ஸ்ரீலங்கா.



திருச்சி: கி.ஆ.பெ. விஸ்வநாதன் ஹையர் செகண்டரி பள்ளி வளாகத்தில் இராஜயோகா மாணவ மாணவியர் வகுப்பில் பங்குபெற்றோர்



**திருச்சிராப்பள்ளி**: பவளவிழாவில் பி.கு. சகோதரிகள் தியானத்தில் அமர்ந்திருக்கும் காட்சி




**திருச்சிராப்பள்ளி**: பவளவிழா மேடையில் சிறப்பு விருந்தினர்களுடன் ஸ்ரீரங்கம் பரதநாட்டியக் குழுவினர் கலை நிகழ்ச்சிக்குப் பின் அன்பளிப்புடன் காட்சியளிக்கும் நிழற்படம்





சென்னை: பிரம்மா குமாரிகள் ஏற்பாடு செய்திருந்த உலக மகளிர் தின நிகழ்ச்சியில் குத்துவிளக்கேற்றி துவக்கிவைக்கும் பிரம்மாகுமாரி ஆஷாஜியுடன் பி.கு பீனாஜி, பி.கு. கலாவதிஜி மற்றும் சிறப்பு விருந்தினர்கள் -- பங்கு பெற்ற மகளிர்



சிறப்பு விருந்தினர்கள் உரை நிகழ்த்துகின்றனர்: (இ-வ) இராஜயோகினி பிரம்மாகுமாரி ஆஷாஜி, .Dr J. உமா மகேஷ்வரி, IAS, திருமதி R. பாக்யா தேவி I.R.S., அவர்கள், திருமதி Dr. நித்யா இராமமூர்த்தி அவர்கள், திருமதி. Dr. அனுராதா கணேசன் அவர்கள், திருமதி நீலிமா அவர்கள்



சென்னை (அடையார்): மத்திய அமைச்சர் திரு. வாசன் அவர்களின் பிறந்தநாள் அன்று வாழ்த்துக்கூறிய பிரம்மா குமாரி சகோதரிகள் பி.கு. சொர்ணலட்சுமி, பி.கு. சரோஜா



அடூர் (கேரளா): பத்மஸ்ரீ அடூர் கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு இறை நினைவு பரிசு வழங்குபவர் பி.கு. உஷா



சென்னை (அண்ணாநகர்): இலண்டனிலிருந்து விஜயம் செய்த பி.கு. இரத்தன் தாதா மற்றும் அவரது துணைவியார் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர், உடன் பி.கு. ஜான்சிராணி



**திருச்சிராப்பள்ளி**: பவளவிழா நிகழ்ச்சியில் பங்குபெற்ற பொதுமக்கள்

R.No. : 49463/87